Registered as a Newspaper

பக்கங்கள் 8

விலை ரூபா 6·00

# ஈழநாதம்


வெள்ளி மஞ்சரி


நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 09 | 25.11.94 | வெள்ளிக்கிழமை | ஓசை 280

## ஆண்டு 3ற்கு புதிய பாடத்திட்டம் அடுத்த ஆண்டு முதல் அறிமுகம்

அடுத்த வருடம் தொடக்கம் ஆண்டு மூன்றில் கற்கும் மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தை அறிமுகம் செய்து வைக்க தேசிய கல்வி நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இப்பாட நெறியைப் பேசுகிக்கும் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கு தெரியப்படுத்தி உள்ளது இதன் ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக மூன்றாம் ஆண்டில் புதிய பாடத்திட்டத்தை ஆசிரியர்களிடையே அறிமுகம் செய்யும் நோக்குடன் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி (8 ஆம் பக்கம் பார்க்க)







யாழ்நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர்வளைவொன்றினை முதலாவது படத்திலும் குருநகர் சென்றோக்ஸ் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள கப்பல் வடிவத்திலான மாவீரர் பந்தலை இரண்டாவது படத்திலும் கோண்டாவிலில் நடைபெறும் புகையிரதக் கண்காட்சியை மூன்றாவது படத்திலும் காணலாம்

# போர்க்கப்பல்களைப் பாதுகாப்பதற்கு விமானப்படையை பலப்படுத்த முடிவு

## 6 இராட்சத ஹெலிகள் கொள்வனவிற்கு முயற்சி

வடபகுதிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படைப் போர்க் கப்பல்களுக்கும், விநியோகக் கப்பல்களுக்கும் விமானப்படை மூலம் பாதுகாப்பு வழங்கும் திட்டமொன்றை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றன. இதற்கென ஆறு இராட்சத உலங்குவானூர்திகளையும் கொள்வனவு செய்ய அவை முடிவு செய்துள்ளன. வடபகுதிக் கடற்பரப்பில் கடற்புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, கப்பல்களைப் பாதுகாக்கவும், விநியோகத்தை தடைப்படாமல் பேணவுமே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

வடக்கில் பலாலி, வெற்றிலைக்கேணி, ஆனையிறவு போன்ற பாரியபடை முகாம்களும் தனித்தனியான தீவுகளும் கடற்படையினரின் விநியோக நடவடிக்கையிலேயே பெரிதும் தங்கி இருக்கின்றன இந் நிலையில் கடற்புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து இருப்பதால் விமானப்படையைப் பலப்படுத்த வேண்டியது அவசியமானது என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (8ஆம் பக்கம் பார்க்க)

## படகு சேவை இல்லை

இன்றும், நாளையும் வழமையாக நடைபெறும் கிளாலி படகுச் சேவை நடைபெறமாட்டாதுஎன அரசியல் துறை நடுவப் பணியகம் அறிவித்துள்ளது.

## சமாதானப் பேச்சிற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை

### அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா

[கொழும்பு]

சமாதானப் பேச்சுக்கள் குறித்து அரசாங்கம் இன்னமும் ஒரு திகதியை நிர்ணயம் செய்யவில்லை என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார்,

நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை மாநாட்டுத் தீர்மானங்களை பத்திரிகையாளருக்கு தெரிவிக்கும் போது இதனை அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக மேலும் தெரிவித்துள்ளார்.

## சில்லாலையில் படையினரால் கைதாகி விடுவிக்கப்பட்ட ஏழு பேர் யாழ் வந்து சேர்ந்தனர்

(வடமராட்சி)

பலாலிக்குச் சென்றிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் சிறிலங்கா இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட ஏழுபேரை அழைத்து வந்தனர்,

சில்லாலையில் வைத்து கடந்த 19-ம் திகதி கைது செய்யப்பட்டுவிடுவிக்கப்பட்ட ஏழுபேரும் நேற்று யாழ் வந்து சேர்ந்தனர்.

வைத்திலிங்கம் ராஜரட்ணம் (45) வினாசித்தம்பி கணபதிப்பிள்ளை (48) க. பரமேஸ்வரி (44) இராமுப்பிள்ளை - கனகரட்ணம் (64) (8 ஆம்பக்கம் பார்க்க)

## வீர வணக்கம்

மணலாற்றுப் பிரதேசத்தில் கடந்த 22ஆம் திகதி தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து மூழ்கியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் சாவடைந்தார்.

2 ஆம் லெப்டினன்ட்அரசப்பன் (தேவராசா கிசோககுமார்- லோட்டன் றோட், மானிப்பாய் யாழ்ப்பாணம்) என்னும் இடபோராளிக்கு விடுத [8-ம் பக்கம் பார்க்க]



2ஆம் லெப். அரசப்பன்



வீரவேங்கை நெடுமாறன்

## படையினர் நடவடிக்கைகளுக்கெதிராக மன்னார் மீனவர் போராட்டம்

(மன்னார்)

தமிழர்களின் அன்றாட சீவனத்திற்காக நம்பியிருக்கும் கடற்தொழிலை மேற்கொள்ள படையினர் தடுத்து வருவதையொட்டி, மன்னார்தீவு மீனவர்கள் மறியல் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

அத்தியாவசியப் பொருட்களுக்கு மன்னார் தீவில் தட்டுப்பாடு நிலவி வருவதையும் மறியலில் ஈடுபட்ட மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, மன்னார் தீவுப் பகுதிக்குள் மக்கள் செல்ல பல கட்டுப்பாடுகளை படையினர் விதித்துள்ளனர். கடற் பயணங்களும் கடற்படையின் தீவிர கண்காணிப்புடன் நடத்தப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

## மன்னார்தீவு மக்கள் பட்டினியால் துன்பம்

### அரச அதிகாரி தகவல்

(கொழும்பு)

மன்னார் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில்லாத பகுதிகளில் மக்கள் அன்றாடச் சீவியத்தை நடத்தும் (8ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பிரதேசமெங்கணும் மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

(மன்னார்)

வன்னி பெருநிலப்பரப்பில் தமிழீழ மாவீரர் வாரம் மிகுந்த எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது

மாவீரர் ஆலயங்களில் மாவீரர் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டுள்ளதுடன் சுடர்களும் ஏற்றப்பட்டுள்ளன. வட்டாரீதியாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் ஆலயங்களுக்கு இரவு பகல் மக்கள் பெருமளவில் திரண்டு மலரஞ்சலி செலுத்தி மாவீரர்களை நினைவு கூர்ந்த வண்ணமுள்ளனர்.

பொதுமக்களினதும் பாடசாலை மாணவர்களினதும் ஒத்துழைப்புடன் சிரமதான அடிப்படையில் வீதிகள் அனைத்தும் செப்பனிடப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சிதருகின்றன- மஞ்சள் சிவப்பு நிற வர்ணங்களால் வீதிகள் விழாக்கோலம் பூண்டுள்ளன. அரச மற்றும் தனியார் துறையினர் வர்த்தகர்கள் பாடசாலை (8 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை அரசு கைவிடவில்லை

### - பலபத்த பெண்டி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமாதான முயற்சிகளை நாம் கைவிடவில்லை- அதற்கான முயற்சிகளில் நாம் முனைப்பாக உள்ளோம் என ஜனாதிபதியின் செயலாளரும் விடுதலைப் புலிகளுடனான முதல்கட்ட சமாதானப் பேச்சுக்களுக்கு அரசாங்க தரப்புக் குழுவுக்கு தலைமை தாங்கி வந்தவருமான கே. பலபத்தபெண்டி கொழும்பு தமிழ் தினசரியொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வடக்கு - கிழக்கு பிரச்சினைத் தீர்வில் அரசாங் (8ஆம் பக்கம் பார்க்க)

## கிட்டு பூங்கா இலவச அனுமதி

மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துமுகமாக ஞாயிற்றுக்கிழமை (சனி இரவு 10 மணிமுதல் ஞாயிறு இரவு 10 மணி வரை) அன்று கேணல் கிட்டு நினைவுச் சிறுவர் பூங்கா திறந்திருக்கும்.

அன்றையதினம் பூங்காவினுள் செல்வதற்குக் கட்டணம் ஏதும் அறவிடப்படமாட்டாது எனவும் அதன் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

# ஒவ்வொரு மாவீரர் வரலாறும் புத்தகங்களாக வேண்டியவை

**யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி செல்வராசா**

[தென்மராட்சி]

ஒவ்வொரு மாவீரனின் வரலாறும் பாடப்புத்தகங்களாக எழுதப்பட வேண்டியவை. இந்த வகையில் லெப். கேணல் குணா அவர்கள் வித்தியாசமான முறையில் தலைவரின் கொள்கையில் நின்று இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்து மாவீரனானார். இவ்வாறு யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராசா தெரிவித்தார்.

கேடில்ஸ் தும்புத் தொழிற்சாலையில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் தென்மராட்சிக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் லெப். கேணல் குணா நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவாலய திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நேற்றுமுன்தினம் தென்மராட்சிக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. ஜெயா தலைமையில் இவ்விழா இடம்பெற்றது. முதல் நிகழ்வாக நினைவாலய ஈகச்சுடரினை தென்மராட்சி கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் திரு. கானகனும், தேசியக் கொடியினை தென்மராட்சிக்கோட்டப் பொறுப்பாளர் திரு. வீமனும் ஏற்றி வைத்தனர். நினைவாலய உருவப்படத்தினை யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராசா திரைநீக்கம் செய்து வைத்தார். பின்னர் ஊழியர்கள், பொதுமக்கள், போராளிகள் என உருவப்படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர் எமது போராட்டத்தில் எத்தனை அளப்பெரிய தளபதிகளை நாம் இழந்துள்ளோம். எம்முடன் சேர்ந்து ஒரு கோப்பையில் அடிபட்டு சாப்பிட்டு ஒன்றாகக் கிடந்து உறங்கி வாழ்ந்த உயிரினும் மேலானவர்களை இழந்துள்ளோம். இழப்புக்கள் எமக்குக் கவலைதான் ஆனால் எத்தனை இழப்புக்கள் வந்தாலும் மனம் தளராது உறுதியுடன் எமது மண்ணை மீட்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் தான் மரணித்த மாவீரர்கள் அவர்களின் பாதையை தொடர்பவர்கள்தான் நாமும் அதே போல் மக்களும் அவர் விட்ட பாதையில் தொடரவேண்டும் என்றார் இவரைத் தொடர்ந்து அரசியல் துறையைச் சேர்ந்த திரு. அரசண்ணா, திரு. மார்க்கண்டு மாஸ்ரர் திரு. ஜெயக்குமார் ஆகியோர் உரை நிகழ்த்தினர். [86]

# மாவீரர்கள் தமிழீழ வரலாற்றிற்கு புதியவடிவம் கொடுத்த சிற்பிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ வரலாற்றுக்குப்புதிய வடிவம் கொடுத்த சிற்பிகள் மாவீரர்கள். அவர்கள் காட்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க புனிதப் பாதையில் நாமும் புறப்பட்டுச் செல்வோம்-இவ்வாறு வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுசங்கங்களின் சமாசம் விடுத்துள்ள மாவீரர் வார நினைவுச்செய்தியில்குறிப்பிடப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

தமிழீழத்தில் எம்மோடு வளர்ந்து, எம்மோடு வாழ்ந்து எமது சுதந்திர பூமியை மீட்டு எமது உரிமைகளைப் பெற்றுத் தந்து எமக்கிருக்கும் அனைத்து ஒடுக்கு முறைகளையும் நீக்கி எம்மை சுதந்திர தமிழீழத்தில் சுதந்திரமாகவும், சுயதேவைகளைப் பூர்த்தி செய்பவர்களாகவும் வாழ வைக்க தம்முயிரைத் தற்கொடையாக்கிய அந்தப் புனிதர்களை நினைவிற் கொள்வது ஒவ்வோர் தமிழனினதும் வரலாற்றுக் கடமையாகும்.

தன்னலத்தை தகர்த்தெறிந்து தமிழ் மக்களின் நன்நலங்களைப் பெற்றுக்கொடுக்க தன்மான உணர்வோடும் தமிழினத்தின் பற்றோடும் தன் கழுத்தில் நஞ்சணிந்து உறவுகளை மறந்து மறவர் தமிழ்ப்படையாக மாறி, மாற்றான் படைகளை எம் மண்ணில் இருந்து அகற்றுவதற்காய் அல்லும் பகலும் அயராது விழித்திருந்து உழைத்தவர்கள் தான் எமது உள்ளத்தால் நினைவிற் கொள்ளும் உத்தம வீரர்கள்.

களத்திலே எதிரி படைகளை வென்றவர், கொடுமைகள் தந்த எதிரி முகாம்களை அழித்தவர். அந்நியப் படையை அகற்றிய வீரர்கள், சாதிவீகத்தின் சரித்திரம் மாற்றியவர், கரும்புலியாகக் காற்றோடு கலந்தவர், கடல் புலியாகிக் காவியம் படைத்தவர், உலகமே வியக்கும் உயர்நிலை பெற்றவர், வரலாற்றுக்கு புதிய வடிவம் கொடுத்த சிற்பிகள், தமிழின வரலாற்றில் புதிய பரிணாம வளர்ச்சிக்குவழி சமைத்தவர்.

இவர்கள் எம் உறவினர்கள், இந்த மண்ணின் மைந்தர்கள் மங்கையர்கள் இதனால் இவர்களின் அளப்பரிய சாதனைகளை, தற்கொடைகளை, இக்காலத்தில் பகிர்ந்து கொண்டு பெருமை கொள்வதுடன், அவர்கள் காட்டிய அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க புனிதப் பாதையிலேபுறப்பட்டுச் செல்வோம். அந்த இலட்சிய வீரர் எம்முடன் இருக்கின்றார்கள் எனும் உணர்வுடன் அவர் பாதையில் ஒன்றிணைந்து செல்வோம், செயற்படுவோம் வெற்றிகொள்வோம். சுதந்திர தமிழீழத்தை அமைத்து அந்த உத்தம மாவீரர்களின் கனவுகளை நனவாக்குவோம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒளிப்பிழம்பான மாவீரர்கள்

**யாழ். வர்த்தக ஊழியர் கழகம்**

(யாழ்ப்பாணம்)

தேசிய விடுதலைப் போராட்டத்தின் பாதையில் ஒளிப்பிழம்பாக வழிகாட்டி நிற்கிறார்கள் மாவீரர்கள். மாவீரர்களது வீரம், ஈகம் அனைத்துலகையும் வியந்து நிற்க வைத்து விட்டது. இவ்வாறு யாழ். வணிக ஊழியர் கழகம் விடுத்துள்ள மாவீரர் தினச் செய்தியில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

சிறிலங்கா பேரினவாதத்தின் கொடூரக் கரங்களின்றும் மொழியை, பண்பாட்டை, பொருண்மியத்தை, தாயகத்தைக் காக்கப் போராடிதமது சாவை சாதனையாக்கி வீரச்சாவடைந்துவித்தாகியவர்கள் மாவீரர்கள். இவர்களது நினைவுகளை, கனவுகளை எமது நெஞ்சில் இருத்தி விடுதலைக்கனலை வளர்ப்பதற்கான புனித நாட்கள் தான் மாவீரர் வார நாட்கள். தேசியத் தலைவரது வழிகாட்டலில் எந்த வல்லாதிக்க சக்தியின் ஆதிக்கத்திற்கும் ஆட்படாது போராடிக்கொண்டிருக்கிறோம்.

புதிய புறநானூற்றின் போர்ப்பரணியாகஇவர்களது வீரம் விளங்குகிறது. மாவீரர் வாரத்தில் மாவீரர் ஆலயங்களுக்கு திரண்டு சென்று மலரஞ்சலி செலுத்துவோம். மாவீரர் நாளன்று இரவு 12.01 செக்கனுக்கு மாவீரர் மூச்சாக எங்கும் ஆலயமணி நாதம் ஒலிக்க எமது உணர்வுகளை ஒழுங்குபடுத்தி மௌன அஞ்சலி செலுத்துவோம். 12 மணி 2 நிமிடத்திற்கு சுடர் ஏற்றிப் போற்றுவோம். அனைத்து இல்லங்கள், அலுவலகங்கள், பாடசாலைகள்தொழில்நிலையங்கள் மாவீரர் சுடரில் பிரகாசிக்கட்டும். மாவீரர் நாட்கள் பொங்கி வரும் எமது விடுதலைஉணர்வுகளை வெளிக்காட்டும் திருநாட்களாக அமையட்டும். விடுதலைப் போராட்டத்தில்மீளவும்எம்மை அர்ப்பணிக்கும் நாட்களாக புனிதம் பொங்கும் மாவீரர் வார நாட்கள் அமையட்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்ப்

'ஆபதி' என்பது பசுக்களின் தலைவன் என்ற பொருளில் பதியப்பட்டதாகக் கொள்ள முடியும். சங்க இலக்கியங்களில் ஆபுத்திரன், கோஆதன், ஆவுந்தி, ஆநிரை போன்ற பதங்கள் பசுவுடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையில் குறிப்பிடப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் ஆபதி என்ற சங்ககால (சாசன) வழக்காறு புராதன கந்தரோடைப் பிராந்தியத்தில் வழக்கிலிருந்தமை முதன்முதலாக தெரியவந்துள்ளது. அந்த வகையில் இப் பிராந்தியத்தில் திராவிடப் பாரம்பரியம் கொண்டிருந்த வாழ்வு முறையின் இறுக்கமான வெளிப்பாடாக-சான்றாக எமக்கு இப் பிராமிச்சாசனம் இன்று கிடைத்துள்ளது.

ஏற்கனவே கந்தரோடையிலிருந்து 'குணி' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட மட்பாண்டச் சாசனம் ஒன்றும், 'கோவேதம்' என்ற வாசகம் பொறிக்கப் பட்ட அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி நாணயம் ஒன்றும் மீட்டெடுக்கப்பட்டமை இப்பின்னணியில் நினைவு கூரத்தக்கன. தொடர்ந்தும் இப்பிராந்தியத்தில் தொல்லியல் முன்னிலை ஆய்வுகளைதொல்லியல்-வரலாற்று விரிவுரையாளரான திரு. செ. கிருஷ்ணராசா முன்னெடுத்து வருகின்றார்.


## வரி விளம்பரம்

**மனிதரும் சமூக வாழ்வும்**
சி. கா. செந்திவேல் எழுதிய மனித சமுதாய தோற்றம், வளர்ச்சி பற்றிய பதின்மூன்று ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு, எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் -வசந்தம் புத்தக நிலையம். (10202)

**சமூக மாற்றத்திற்கான அரங்கு**
ஈழத்தமிழரிடையே சமூக மாற்றத்திற்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒரு நாடக ஆக்கவியல் ஆய்வு நூல் எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் வசந்தம் புத்தக நிலையம் (10203)

**வியாழ மாற்ற பலாபலன்கள்**
மூன்று மாதங்களுக்கு தாழ முக்கத்தால் வடக்கில் பெருமழையும், கிழக்கில் சூறாவளியும், தெற்கில் மண்சரிவும் ஏற்படுவதால் யுத்தநிலைமை முற்றாகச் செயலிழக்கும். சதியாவின்வியாழ மாற்றத்திற்கு சுரேகா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (10201)

**காணவில்லை**
கன்னிப் பசு மாடு(பிறவுண்) சிவப்பு நிற நைலோன் கயிறுடன் 22-11-94, கந்தர் மடம் சந்தியில் தவறிவிட்டது. கண்டவர்கள் கீழ் கண்ட முகவரிக்கு அறியத்தரவும் சன்மானம் வழங்கப்படும். வே. ரவீந்திரன் (மங்களேஸ்வரி சோதிட நிலையம்) சிவன் புது வீதி, நல்லூர் (10192)

**நீமியா உரம்**
நெற்பயிரில் பூச்சிகளின் தாக்கத்தை நீக்கவும், அமோக விளைச்சலுக்கும் இயற்கை உரம் "நீமியா உரம்" கைதடியில் "கிறைண்டிங் மில்" ஸ்தாபனத்திலும் விற்பனைக்குள்ளது. பாவித்துப்பயன்பெறுங்கள். "மில்க்வைற்" (சி/10762)

**ஆண்டுவினாத்தாள்**
ஆண்டு 4ற்கு மாதந்தோறும் வெளியிடப்படும் மாதிரி வினாத்தாள்கள் 26-11-94 சனி வெளியிடப்படும். தேவையானோர் தொடர்பு கொள்ளவும். மாதிரிநாளாந்த வாராந்த (Weekend Classes) வகுப்புக்களும் மற்றும் வகுப்புக்களும் நடைபெறுகின்றன புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (10189)

# எம் மண்ணிற்காய் வித்தாகிய மாவீரரின் இப்புனிதவாரத்திலேயே!

யாழ் பழைய புத்தகக்கடை தனது மூன்றாண்டுகளை நிறைவு செய்து நான்காம் ஆண்டினுள் வீறுடன் நுழைகின்றது.

இக் காலத்தினுள் நாம் பெரும் வளர்ச்சியடைய உறுதுணையாக இருந்த அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரிற்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்கே!!

★ தமிழ், ஆங்கில
★ அறிவியல்
★ மருத்துவவியல்
★ இலக்கியம்
★ தத்துவம்
★ சமய, சாஸ்திர புத்தகங்கள்
★ சஞ்சிகைகள்
★ பத்திரிகைகள்
★ வெற்றுத் தாள்கள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும், நீங்கள் படித்த புத்தகங்கள், சஞ்சிகைகளை விற்பனை செய்யவும் இன்றே வாருங்கள்.

## யாழ்பழையபுத்தகக்கடை

யாழ் பழைய புத்தகக்கடை,
அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.
(10199)

**பாவியுங்கள்!**
## அண்ணா பற்பொடி

பாவித்த அண்ணா பற்பொடி வெற்றுச் சரைகள் 25 கொடுத்து ஒரு அப்பியாசப் புத்தகத்தை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணா தொழிலகம்
இணுவில்.
(10770)

## கப் மெழுகுதிரி
★ பலமணிநேரம் எரியக்கூடியது ★
தயாரிப்பாளர்:
கண்ணன் கிதை
112, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (10204)

## நினைவு கூருகின்றோம்...

### 25. 11. 1994

1984-ம் ஆண்டு இதே தினத்தில் சுழிபுரத்தில் சுவரொட்டி ஒட்டப்போகும்போது தேசவிரோதிகளினால் படுகொலை செய்யப்பட்ட

**சிவா** (சிவசுப்பிரமணியம் சிவகுமாரன்-மூளாய் தெற்கு -யாழ்)
**சின்னச்சிவா** (கந்தையா சிவானந்தம்-டச்சு வீதி, தொல்புரம் மத்தி, சுழிபுரம்-யாழ்)
**ஈஸ்வரன்** (கந்தையா யோகீஸ்வரன் - கண்டாமை, தொல்புரம் மத்தி, சுழிபுரம்-யாழ்)
**சிவம்** (சிவசுப்பு சிவராஜா-தொல்புரம் மத்தி, சுழிபுரம் -யாழ்)
**தேவன்** (விஷ்ணு தேவநாதன்-தொல்புரம் மத்தி, சுழிபுரம்-யாழ்)
**புவி** (தர்மரெட்ணம் புவீந்திரன் - தொல்புரம் மத்தி-சுழிபுரம்-யாழ்)

1985-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,
★ **சி. சிவலோகமூர்த்தி** (கடற்கரைச்சேனை, மூதூர்-திருமலை)

1988-ம் ஆண்டு மட்டு-நாவற்குடாவில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சயனைட்உட்கொண்டு வீரச்சாவெய்திய
**உருத்தி** (சினித்தம்பி விநாயகமூர்த்தி - நாவற்குடா குடியிருப்பு-மட்டு)

1990-ம்ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,
**லெப். வீனஸ்** (எதிர்வீரசிங்கம் ரவீந்திரன்-கொம்மாந்துறை-வல்வெட்டித்துறை)

காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனானசமரில்விழுப்புண்ணடைந்துவீரச்சாவெய்திய,
**மகாராசா** (அருமைத்துரை சிவானந்தம்-வெற்றிலைக்கேணி-வடமராட்சி கிழக்கு)

திருமலைப் பகுதியில் எமது முகாமொன்றில் எதிர்பாராத வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,
**லெப். ஜெயபால்** (கணபதி மாடாசாமி-பன்குளம்-திருமலை)

1992-ம் ஆண்டு பலாலி-தொண்டமானாறு தொடர் காவலரண் தகர்ப்பின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,
**கடற்புலி கப்டன் முரசு** (தம்பிராசா லோகிதன்-பன்குளம்-திருமலை)
**லெப். மாணிக்கதாசன்-டினெட்** (மாணிக்கவாசன் இராகநாதேந்திரன்-வவுனியா)

மட்டு-ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**தாரத்தன்-பீற்றர்** (தங்கராசா திலகராசா-மத்திய முகாம்-அம்பாறை)
**சிறீவர்மன்-சுசி** (சிவசிதம்பரம் சபானந்தகுமார்-தாமரைக்கேணி-மட்டு)

திருமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,
**கப்டன் சேகரன்-சுது** (ராஜப்பு அன்ரனி ராஜசேகர்-மூதூர்-திருமலை)

மன்னார்-பரியாரிகண்டல் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட, வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,
**லெப். மதி** (பாலசிங்கம் சத்தியசீலன்-நவக்கிரி, புத்தூர்-யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற் பரப்பிலும் இந்தியப்படையினராலும், சிறிலங்காப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக் குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**
(சி-10768)

# தேவை
## களஞ்சியப்பகுதி எழுதுவினைஞர்

களஞ்சியப் பகுதியில் கடமையாற்ற ஆண் எழுதுவினைஞர் ஒருவர் தேவை

க. பொ. த. (உ/த) பரீட்சையில் வர்த்தகவியலில் சித்திபெய்தியவராகவோ அல்லது ஏற்கனவே கணக்கியல் துறையில் அனுபவம் உள்ளவராகவோ இருப்பது விரும்பத்தக்கது.

**வயது: 25 - 45 வருடங்கள்**
**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

28-11-94 காலை 10.00 மணிக்கு கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடனும் வேலை அனுபவச் சான்றிதழ்கள் இருப்பின் அவற்றுடனும் ஈழநாதம் பணிமனைக்கு நேரில் சமுகம் தரவும்.

ஈழநாதம்
81, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(இ)

# நேப்பாள மக்களின் தீர்ப்பு; இந்திய மேலாண்மைக்கொரு ஆப்பு

பாலகுமாரன்

இந்திய மேலாண்மையின் குறியீடாக அம்மேலாண்மையை அயல் நாடுகளில் நிலைநிறுத்துவதையே நோக்கமாகக் கொண்டு இயங்கி வரும் 'சவுத் புளொக்' எனப்படும் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சு இப்போது திகைத்து நிற்கின்றது: டெல்லியின் உயர் ஆட்சி பீடமோ அதிர்ந்து போயுள்ளது: இந்தியக் கொள்கை வகுப்பாளரிடையே ஒருவித குழப்பமும், பரபரப்பும் இப்போது தோன்றுகின்றது. இவற்றிற்கு எல்லாம்காரணம் நேபபாளத்தில் சென்ற வாரம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் எதிர்பாராத முடிவுகள்தான். இந்திய எதிர்ப்பு வாதத்தினை முன்வைத்த தீவிர இடதுசாரிப் போக்குள்ள கட்சிகள் சில அங்கு தேர்தலில் வெற்றி ஈட்டியுள்ளன. அதேவேளை உலகமெங்கும் பல பொதுவுடமைக் கட்சிகள் தமக்குத் தாமே முடுவிழா நடத்துகையில்-இன்னும் பல கொள்கைகளை மாற்றி, பெயர்களை மாற்றி தப்பிப் பிழைத்து மறுபிறவி எடுக்க முயலுகையில் நேப்பாளத்திலோ அதுவும் மிகவும் பின்தங்கிய ஒரு சிறு நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது என்பதே ஒரு முக்கிய செய்தியாகின்றது. நேப்பாளக் கம்யூனிஸ்ட் (ஒன்றிணைக்கப்பட்ட மாக்சிய-லெனினிய வாதிகள் (Communist Partyof Nepalic Unified Marxist - Leninist) என்கிற கட்சி நேப்பாளத்தின் எல்லாக் கட்சிகளையும் விட கூடுதலான இடங்களைப் பெற்று அடுத்த அரசை அமைக்கும் நிலையில் இப்போதுள்ளது.ஆனால் CPN (UML) எனப்படும் இக்கட்சி ஏனைய பொதுவுடமைக் கட்சிகள் போல் வறட்டு சித்தாந்தக் கட்சியல்ல. நேப்பாளத்தின் தேசியத்தை - அதன்மாண்பை அன்னியர் தலையீடற்ற உயர் தேசிய நிலைக்கு உயர்த்த வேண்டுமென்கின்ற உயிர்ப்புள்ள தேசியப் பண்பும் இக்கட்சியின் முதன்மை இலக்காகும் என்பதும் இவ்விடத்தில் சொல்ல வேண்டிய செய்தியாகின்றது.

## நேப்பாளத் தேர்தல் முடிவு

எனவேதான் இப்போது உலகின் மிக ஏழ்மையான 25 நாடுகளில் ஒன்றான - 18 மிலியன் மக்களில் மிகப்பெரும்பான்மையோர் ஏழை விவசாயிகளாகவுள்ள மிகவும் பின்தங்கிய-ஆனால் இயற்கை வளப்புள்ள ஒரு சிறிய மலை நாடான நேப்பாளம் இப்போது உலகின் கவனத்தை ஈர்ப்பது மட்டுமன்றி இந்தியாவுக்கு தொண்டையில் குத்திய முள்ளாகியும் விட்டது. ஏனென்றால் சென்ற 13-ம் திகதி நடைபெற்ற தேர்தல் முடிவுகள் எக்கட்சிக்கும் பெரும்பான்மைப் பலத்தை கொடுக்காத போதும் இதுவரை ஆட்சியிலிருந்த இந்தியச் சார்பான G.P கொய்ராலாவை பிரதமராகக் கொண்டிருந்த நேப்பாளக் காங்கிரஸ் கட்சிக்கு பெருத்த அடியைக் கொடுத்துவிட்டது. ஏனென்றால் நேப்பாளத்தில் முதல் தடவையாக சனநாயக அடிப்படையில் நடைபெற்ற1991-ம் ஆண்டின் முதல் பொதுத் தேர்தலில் 205 பேர்கொண்ட நாடாளுமன்றில் 114 இடங்களைப் பெற்று அறுதிப்பெரும்பான்மை பெற்ற கட்சியாக நேப்பாளக் காங்கிரஸ் கட்சி விளங்கியது ஆனால் இம்முறை நடந்த தேர்தலில் 80 இடங்களைமட்டுமேஇதனால் பெறமுடிந்தது அதுபோலவே 1991-ம் ஆண்டு தேர்தலில் 68 இடங்களை மட்டும் பெற்று பிரதான எதிர்க்கட்சியாகவிளங்கிய CPN (UML) இம் முறை 88 இடங்களைப் பெற்றுள்ளது இதைவிட சீனச் சார்புப் போக்குள்ள விவசாயிகள் கட்சியொன்றும் 4 இடங்களைப் பெற்றுள்ளது. அதுபோலவே மிதவாதக் கட்சியான நேப்பாளக் காங்கிரஸின் மீதான மக்கள் அதிருப்தியை பயன்படுத்தி சென்ற தேர்தலில் 4 இடங்களை மட்டுமே பெற்ற R.P.P எனப்படும்ராஷ்த்திரிய பிரஜாதந்திரக்கட்சி இம்முறை 20 இடங்ளைப் பெற்று மூன்றாம் இடத்திற்கு வந்து விட்டது. இக்கட்சி பிற்போக்கு தன்மையுள்ளதும் முன்னைய அரச பரம்பரை ஆட்சியின் ஆதரவாளர்களை அதன் எச்சசொச்சங்களைக் கொண்ட கட்சி என்பதும் இங்கே குறிப்பிட வேண்டிய செய்தி (ஓரிரு தேர்தல் முடிவுகள் இக்கட்டுரை எழுதப்படும் பொழுது வெளியாக வில்லை).

## இந்திய தாசர் கொய்ராலாவின் வீழ்ச்சி

1991ம் ஆண்டு உறுதியான பெரும்பான்மையோடு ஆட்சியிலமர்ந்த நேப்பாளக் காங்கிரஸ் கட்சி இடைவழியில் வீழ்ச்சியடைந்தது ஏன் என்கிற கேள்விஇங்கேஎழுகின்றது பிரதமராகவிருந்த G.P. கொய்ராலா என்பவருக்கு எதிராக அவரது கட்சிக்குள்ளேயேயும் எதிர்ப்புக்கிளம்பியது இதற்கு பிரதான காரணம் கொய்ராலாவின் இந்தியச் சார்பான போக்கும் - இந்திய முதலாளிய நலன்களை கவனித்து செயற்பட்ட தன்மையுமே ஆகும் இதனாலே கட்சியின் உயர் தலைவராக கருதப்பட்ட கணேஷ் மான்சிங்கும் கட்சித் தலைவரான பட்டாராய் என்பவரும் கொய்ராலாவை பதவி அகற்ற முழுமூச்சாக முயன்றனர். இப்போக்கிற்கு - நேப்பாளம் இந்திய நலன்கட்கு தாரை வார்க்கப் டுவதாக கூறிவந்த இடதுசாரிக் கட்சிகள் அனைத்துமே ஆதரவளித்தன. அதன்பலன் இவ்வருடம் யூலை மாதம் நாடாளுமன்றில நடைபெற்ற வாக்கெடுப்பின் போது நேப்பாளக் காங்கிரஸ் கட்சியின் 36 உறுப்பினர்கள் திடீரென கொய்ராலாவிற்கு எதிராக எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து வாக்களிக்கவே எதிராக 86 வாக்குகளையும்ஆதரவாக 74 வாக்குகளைப் பெற்ற கொய்ராலா பதவி இழந்தார். அக்கட்டத்தில் அடுத்த பிரதான கட்சியான நேப்பாளக் கம்யூனிஸ்ட் கட்சி CPN (UML) தன்னை ஆட்சி அமைக்க அழைக்க மன்னர் பிரேந்திராவைக் கோரியது. ஆனால் இங்கே தான் சதியொன்று நடந்தது மன்னர் பிரேந்திராவோ கொய்ராலாவின் ஆலோசனைப்படி நாடாளுமன்றைக் கலைத்து புதிய தேர்தலுக்கு நவம்பரில் நாள் குறித்தது மட்டுமன்றி கொய்ராலாவையே இடைக்கால பிரதமராகவும் நியமித்தார். இச்செயல் பெருத்த எதிர்ப்பலைகளை நேப்பாளத்தில் கிளப்பியது. அன்னிய தலையீட்டின் விளைவாகவே தாம் அடுத்த அரசை அமைக்க விடாமல் தடுத்ததாக CPN (UML) - நேப்பாளக்கம்யூனிஸ்ட் கட்சி கூறியது. அதே வேளை தீவிரப் போக்குள்ள சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சிகளோ அன்னியத தலையீடு என்பதை மேலும் விளக்கி இந்தியாவும், அமெரிக்காவுமே இவை என உரத்துக் கூறின. நேப்பாள அரசியலில் இந்தியா மட்டுமன்றி உதவி வழங்கும் மேற்கத்தைய நாடுகளின் தூதுவர்களும் தலையிடுவது தெரிந்த செய்தி எனவே தான் இந்தியாவுக்கு விசுவாசமான றோவின் (RAW) தலைமையோடு நெருங்கிய தொடர்புடைய அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கிரிஜா பிரசாத் கொய்ராலா - இடதுசாரிகளை பதவிக்கு வராமல் தடுப்பதற்காக- மரபுகளை மீறி மன்னரால் இடைக்கால பிரதமராக்கப்பட்டார் என நம்பப்படுகின்றது. இச்செயல் இயல்பாகவே ஏற்கனவே இந்திய 'எதிர்ப்பு மனப்பான்மை'யை கொண்டிருந்த நேப்பாளிய மக்களை தேர்தலில் இந்திய எதிர்ப்பு வாதத்தினை முன்வைத்த கட்சிக்கு ஆதரவு அளிக்கத் தூண்டியது எனப்படுகின்றது [ஏனென்றால் இடைக்கட்ட தேர்தலில் தமக்கு வெற்றி வாய்ப்புக்கள் குறைவெனக் கருதித் தேர்தலை இடதுசாரிக் கட்சிகள் உண்மையில் அப்போது விருப்பவில்லை.எனவேஇப்போது நேப்பாளப் பொதுவுடமைக் கட்சி (CPN [UML]) நேப்பாளக் காங்கிரசின் பட்டாராய் பிரிவினரான கொய்ராலா எதிர்ப்பாளரை பயன்படுத்தி அவர்களோடு கூட்டுச் சேர்ந்து புதிய அரசு அமைக்க இப்போது முயல்கின்றனர், இது இப்போதைய கதை;

## இந்தியத் தலையீடு

நேப்பாளத்தின் முன்னைய கதை- இந்தியாவிற்கு அருகில் இருந்ததால் தமிழீழம் பட்ட தொல்லைகளை எமக்கு ஞாபகப்படுத்தும் நான்கு பக்கத்தாலும் நிலத்தால் சூழப்பட்ட நேப்பாளின் அமைவிடமே அதற்கு எதிரியாகி விட்டது ஏனென்றால் தனது வணிக, போக்குவரத்துக்கான தரைவழிப் பாதைக்கு நேப்பாளம் இந்தியாவை நம்பியிருக்க வேண்டியுள்ளது. எனவே தனது நலன்கள் பாதிக்கப்படும் போதெல்லாம் இத்தரைவழித்தொடர்பினை துண்டிக்க இந்தியாவால் முடிகின்றது.அதேவேளை நேப்பாளம் தனக்கு அருகிலுள்ள மற்ற பெரு நாடான சீனாவோடு உறவுகளை ஏற்படுத்துவதையும் இந்தியா விரும்புவதும் கிடையாது. எனவே நேபாளத்திற்கு மிக இக்கட்டான நிலை- சீனாவோடான உறவுகளை சேர்ப்படுத்த நேப்பாளம் முயன்ற போதெல்லாம் அது இந்தியாவால் தண்டிக்கப்பட்டே வந்துள்ளது. இத்தகைய தனது சுயநலப்போக்கினை மறைக்க நேப்பாளத்தில் சனநாயகம் மலரச் செய்யவே தான் உதவி செய்வதாக கூறியே நேப்பாள விடயத்தில் இந்தியா தலையிட்டது. ஆனால் இன்றுஇந்தியாவின் முகமூடி அதனிடம்உதவி பெற்றோரின் இந்திய எதிர்ப்பாலே கிழிக்கப்படுகின்றது.

இந்தியாவின் தலையீடு என்பது இன்று- நேற்றல்ல- நேரு காலத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது இந்தியத்தலையீட்டின் விளைவாக அரங்கேறிய நாடகத்தின் ஒருசில காட்சிகளைப் பார்த்தாலே உண்மை நிலையை உணரமுடியும் முதலாவது நூற்றி நீண்டகாலமாக மன்னராட்சி முறைக்கும் இருந்த நேப்பாளத்தை செல்வச்செழிக்க ''ராணாக்கள்'' எனப்படும் வமிசத்தினர்மன்னரை கைப்பொம்மையாக்கி சருவாதிகார ஆட்சி செய்த போது விரிகின்றது. அப்போது நேரு 1950 களில் இவ்வாட்சிக்கு எதிராக நேப்பாளியகாங்கிரஸ் நேப்பாளக் கம்யூனிஸ் கட்சியினர்என இருதரப்பும் மேற்கொண்ட ஆயுதப் போராட்டத்திற்கு உதவினர். இதன்மூலம் நெருக்கடிக்குள்ளான நேப்பாள ஆட்சியினர் நேரு காலடியில்வந்து விழுந்தபோது உதவிகளை நிறுத்தி தான் உதவியோரை அவர்களை எதிர்த்தோரோடு ''சமரசம் காண நேரு பணித்தார். நேப்பாளக் காங்கிரஸ் இதற்கும் பணிகின்றது ஆனால் இந்தியாவின் தீவிர பொதுவுடமைவாத கட்சிகளின் தோற்றத்தால் 1949ம் ஆண்டு கல்கத்தாவில் தோற்றம் பெற்ற நேப்பாளக் கம்யூனிஸ்ட் கட்சி இதனை ஏற்கவில்லை அடுத்த காட்சி மன்னர் மகேந்திரா பதவிக்கு வந்து மீண்டும் மன்னராட்சியை தொடர முயன்ற போது விரிகின்றது மன்னரின் சனநாயக விரோதப் போக்கிற்கு எதிராக மீண்டும் 1959 ஆண்டளவில் இரு கட்சிகளும் போராட்டமொன்றை ஆரம்பிக்கின்றனர் ஆனால் சீனச் சார்புள்ள கம்யூனிஸ்ட் கட்சி இப் போராட்டத்தில் செல்வாக்கு பெறுவதை அவதானித்த நேரு மன்னர் மகேந்திரா பக்கமே நின்று அவரை தன்பக்கம் இழுத்தார்.

பின்னர் மகேந்திராவின் மகன் பிரேந்திரா 1972ம் ஆண்டில்பதவிக்குவந்த பின் இந்திய மேலாண்மைக்கு மாற்றாக சீனாவோடு தொடர்புகளை பேண முற்படவே மீண்டும் இந்தியா தலையிடுகின்றது மன்னரின் சனநாயக விரோதப் போக்கினை எதிர்த்த நேப்பாளக் காங்கிரசும் நேப்பாளக் கம்யூனிஸ்ட்கட்சியும் அதனின்றும் முளைவிட்ட பத்துக்கு மேற்பட்ட தீவிர இடதுசாரி கட்சிகளும் சனநாயக மீட்பு இயக்க மொன்றை பெருமளவில் கட்டிவளர்த்த போது இந்தியா உதவியது. நேப்பாளக் காங்கிரசின் பல தலைவர்கள் றோவின் அனுசரணையுடன் இந்தியாவில பலகாலம் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டனர் அதோடு இன்னொரு வழியையும் அப்போதிருந்த பிரதமர் ராஜீவ்காந்தி பயன்படுத்தினார் நேப்பாளத்தோடான தனது தரை வழிப் பாதையை மூடிவிட்டார். எனவே வேறுவழியின்றி 30 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற சனநாயக மீட்பு போராட்டத்திற்கு பணிந்த பிரேந்திரா சனநாயக ஆட்சி முறையை ஏற்றார். 1990-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஒன்று பட்டு நின்று வென்ற இரு கட்சிகளும் புதிய அரசியல் யாப்பினை உருவாக்கினர். மன்னர் பிரேந்திரா மீண்டும் தனக்கு காலம் வரும் என எண்ணியவராக வெறும் சம்பிரதாயத் தலைவரானார் இதன்படி முதல் சனநாயகத் தேர்தல்1991-ம் ஆண்டுநடைபெற்றது. நேப்பாளக் காங்கிரஸ் பெரு வெற்றி பெற்றது முறைப்படி ''கணேஸ் மான்சிங் என்கிற முத்த தலைவரே பிரதமராக வந்திருக்கவேண்டும்ஆனால்இந்தியத் தலையீட்டால் கொய்ராலா பதவிக்கு அழைக்கப்பட்டார் அன்றிலிருந்து இந்தியாவின் சுயரூபம் நேப்பாளத்தில் அம்பலமயிற்றுநேப்பாளகாங்கிரசிற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமான உறவும் முறிந்தது.

## இந்திய எதிர்ப்பு வலுத்த விதம்

ஏனைய இடதுசாரிக் கட்சிகளும் அப்பாதிருந்தே நேப்பாளக் கம்யூனிஸ்ட் கட்சியும் கொய்ராலாவின் இந்தியச் சார்புபோக்கிற்குஎதிராகபோர்க் கொடி உயர்த்தின இந்திய அழுத்தத்திற்கு பணிந்த கொய்ராலா நேப்பாளத்தின் நாடாளுமன்றின அனுமதியைப் பெறாமலே நேப்பாளத்தின் இயற்கை மூலவளங்களை இந்தியாவின் நன்மைக்காக பயன்படுத்த அனுமதித்தார். 1991ம் மார்கழியில் நிர்வாகப் பங்கீடு, வணிகம், போக்குவரவு போன்றவற்றில் இந்தியாவுக்கு மிகச் சாதகமான முறையில் நாடாளுமன்றிந்த தெரியாமலே உடன்பாடிகட்கு கொய்ராலா வந்தார் அதிலும் இந்திய அரசு மகாகாளி ஆற்றில் அணை கட்டி நீர்மின்சார ஆலையொன்றை அமைக்க 577 கெக்டேர் நேப்பாள மண்ணை தான

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஆந்திர - கர்நாடக மாநிலத் தேர்தல்; நரசிம்மராவிற்கு ஓர் அக்கினிப் பரீட்சை

ரகுராம்

இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி - இன்று ஆந்திராவில் மிகப் பிரபலமான கோஷமாகியிருக்கும் இந்த வார்த்தைகளே நரசிம்மராவின் அரசியல் எதிர்காலத்தையும்தீர்மானிக்கவிருக்கின்றன.

நாளை இதேநேரம், ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சட்ட சபைத் தேர்தல்கள் இந்திரா காங்கிரசுக்கு மட்டுமன்றி தனிப்பட்ட நரசிம்மராவுக்கும் மிகமிக முக்கியமான பரீட்சைக் களமாகியிருக்கிறது.

இத்தேர்தல்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து தனது பிரதமர் கடமைகளையும் கைவிட்டு, தேர்தல் பிரசாரத்தில் நேரடியாகவே இறங்கியுள்ளார் நரசிம்மராவ் புழுதி பறக்கும் கிராமத் தெருக்களில் இறங்கி ஒவ்வொரு வீட்டின் கதவையும் தட்டி வாக்கு கேட்கும் நாட்டின் பிரதமரை பார்த்து வியப்புற்றுப் போயிருக்கிறார்கள் ஆந்திர - கர்நாடக மாநில மக்கள்.

ஆந்திர மாநிலத்தில் காங்கிரசின் நிலை இன்று தடுமாறிப் போயிருக்கிறது தனது சொந்த மாநிலத்திலேயே காங்கிரஸ் தோற்றுப் போவதை தடுப்பதற்காக இயலுமானவரை முயற்சி மேற்கொண்டு வரும் நரசிம்மராவ் அதற்காக வேட்பாளர்தெரிவு தொட்டு கவனம் செலுத்தி வருகிறார் பழைய முகங்கள் ஒதுக்கப்பட்டு - புதியவர்கள் தேர்தல் களத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர் பல பிரபல அரசியல்வாதிகளின் வாரிசுகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது நரசிம்மராவ் தோன்றும் கூட்டங்களுக்கு சனத்திரள் அமோகமாக திரண்டு வருகின்றது இவற்றையெல்லாம் பார்க்கும்போது காங்கிரசின் வெற்றிவாய்ப்பு பிரகாசமாக தெரிவதாக வெளிப்படையாகத் தோன்றினாலும் உண்மை நிலையும் கருத்துக் கணிப்பீடுகளும் தெலுங்கு தேசத்தையே ஆட்சியமைக்க கூடிய வாய்ப்பு பெறவுள்ள கட்சியாக காட்டுகின்றன.

நாட்டின் தலைவராக நரசிம்மராவ் இருக்கட்டும் மாநிலத்தின் தலைவராக என். டி. ராமராவ் இருக்கட்டும் என்பதே பெரும்பாலான மக்களின் தீர்ப்பாக இருப்பதாக கருத்துக் கணிப்பொன்று கூறுகின்றது. தனியார் நிறுவனமொன்று மேற்கொண்ட இக்கருத்துக் கணிப்பின்படி, மொத்தமுள்ள 294 தொகுதிகளில் 177 இடங்களை தெலுங்கு தேசம் பெற்று வெற்றி பெறும் எனக் கூறுகின்றது. இதேவேளை காங்கிரசிற்கு 101 இடங்களே கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களின் கடந்தகால சாதனைகளை காட்டி வாக்கைப் பெறுவதற்கு மாநில முதல்வர் விஜயபாஸ்கர ரெட்டியும் காங்கிரஸ் கட்சியினரும் பிரயத்தனம் செய்துவருகின்றனர். ஒருபக்கம் இவர்கள் சாதனைகளைக் காட்டி வாக்குகேட்க, மறுபுறம் ஆட்சியின் குற்றங்களை பட்டியல் போட்டு தனது ஆதரவைப் பெருக்க முயற்சி செய்கின்றார் என் டி ராமராவ்.

இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்ற இவரது அறிவிப்பும், பூரணமதுவிலக்குக்கு இவர் எடுத்த நடவடிக்கைகளும், பெரியளவிலான ஆதரவு அலையொன்றைத் தோற்றுவித்துள்ளது.

காங்கிரசின் நட்சத்திரக் கவர்ச்சியற்ற முகங்களுக்கு முன் தெலுங்கு தேசத்தில் அணிவகுத்து நிற்கும் சினிமா நட்சத்திரங்கள் மக்களை கவர்ந்து வருவது வெளிப்படையாகவே தெரிவதாக காங்கிரஸ் கட்சியினரேகூறிவருகின்றனர் என். டி. ராமராவுக்கு அன்றிருந்த கவர்ச்சி இல்லாவிட்டாலும் அவரது கிருஷ்ணாவதார தோற்றங்களை கொண்ட கட்- அவுட்கள் ஆந்திர மாநிலமெங்கும் இன்றும் வரவேற்பை பெறுகின்றன.

ராமராவின் மகனும்திரைப்பட நடிகருமான பாலகிருஷ்ணா, மற்றும் மோகன்பாபு ஜெயப்பிரதா என சினிமா நட்சத்திரங்கள் தெலுங்கு தேசத்துக்குவெற்றிவாய்ப்பை பிரகாசமாக்கியுள்ளன;

இந்நிலையில் காங்கிரஸ் சோர்ந்து போயிருக்கிறது. சினிமா நடிகரான சிரஞ்சீவி தேர்தல் பிரசாரத்தில் பங்கு கொள்ள பின்னிற்பது காங்கிரஸ் எதிர்பாராத சம்பவமாகும்-

எனினும் என். டி: ராமராவின் தனிப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினைகள் தெலுங்கு தேசத்தின் ஆதரவை பாதித்துள்ளன. வயதான காலத்தில் அவரது திருமணமும் அதனால் தெலுங்கு தேசத்தின் முக்கிய புள்ளி எனக் கருதப்பட்ட ரேணுகா சௌத்ரியின் வெளியேற்றமும் தெலுங்கு தேசத்திற்கு பின்னடைவை தந்துள்ளது.

காங்கிரஸ் கட்சிக்குள் உள்ள கோஷ்டிப் பூசல் காங்கிரசின் அதிகாரபூர்வ வேட்பாளர்களுக்கு எதிராக போட்டி வேட்பாளர்களை களத்தில் குதிக்க வைத்துள்ளது இதனால்கிடைப்பதாக கருதப்படும் காங்கிரஸ் சார்பான வாக்குகளும் சிதறக்கூடும் இது தெலுங்கு தேசத்துக்கே வாய்ப்பாக அமையும் என்பது கவனிக்கத்தக்கது.

மற்றைய கட்சிகளைக் கருதின் பாரதிய ஜனதாக் கட்சி தனது மூன்றாவது போட்டி முறையைத் திறந்துள்ளது. ஆயினும் பெரியளவில் இது பாதிப்பைத் தரும் என கருதப்படவில்லை'

ஜனதாதளம் மற்றும் கம்யூனிஸட் கட்சிகள் தெலுங்கு தேசத்தை ஆதரிக்கின்றன. மேலும் இந்திய முஸ்லிம் லீக்கும் அதன் தலைவர் இப்ராஹிம் சுலைமான் சேட்டும் தெலுங்கு தேசத்தை ஆதரித்து பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளதும் முஸ்லிம்களின் பெருவாரியான வாக்கு வங்கியொன்றை தெலுங்கு தேசத்துக்கு பெற்றுக் கொடுக்கும் என நம்பப்படுகின்றது.

தமிழ்நாட்டில் சீர்கெட்டுப் போயுள்ள அதிமுக காங்கிரஸ் உறவின் பாதிப்பு ஆந்திராவிலும் எதிரொலிக்கின்றது தமிழர்கள் குறிப்பிடத்தக்க அளவில் வாழும் சித்தூர், நகரி, சூலூர் பேட்டை ஆகிய பகுதிகளில் அதிமுக வேட்பாளர்களை நிறுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது

இந்த வகையில் நரசிம்மராவ் ஆந்திர மாநிலத் தேர்தல் முடிவுகள் வெளியாகும் போது நிச்சயம் சங்கடப்படவே செய்வாரென்று தெரிவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்

வடஇந்தியாவில் ஆதரவுத்தளம் ஒன்றைப் பெற்றிராத நிலையில் தெற்கும் அவரைக் கைவிட்டால், அது அவரது அரசியல் எதிரிகளுக்கு வாய்ப்பாகவே போய்விடும்

சோனியா காந்தியின் அரசியல் பிரவேசம் அவரை அதிர்ச்சியுறச் செய்துள்ள நிலையில் ஆந்திர முடிவுகளை அவர் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருப்பது தெரிந்தாலும் முடிவுகள் அவருக்கு சந்தோசத்தை தரும் என்பது சந்தேகமாகவே தெரிகின்றது

கர்நாடக மாநிலம் நரசிம்மராவுக்கு ஆதரவைத் தரும் என நம்பப்படுகின்றது மாநில முதல்வரான வீரப்ப மொய்லியும் காங்கிரசும் பலம்மிக்க நிலையில் இல்லாவிட்டாலும் எதிர்க்கட்சிகளிடையே உள்ள முரண்பாடுகள் - காங்கிரசுக்கு சாதகமாக அமையும் எனக் கூறப்படுகின்றது

முன்னாள் முதல்வரும் இந்திரா காங்கிரசிலிருந்து வெளியேறி கர்நாடக காங்கிரசை அமைத்துள்ளவருமான பங்காரப்பா கிராமப்பகுதிகளில் ஆதரவு பெற்றவராக காணப்படுவது காங்கிரசுக்கு பாதகமாகவுள்ள அம்சமாகும்-

பெங்களூர்தொலைக் காட்சியில், இருந்தாற்போல் செய்யப்பட்ட உருதுமொழிச் செய்தியறிக்கை, முஸ்லிம் மக்களுக்கு எதிரான மொழிக்கலவரத்தை தூண்டியுள்ளமை காங்கிரசை பாதித்துள்ள இன்னொரு அம்சமாகும்.

முஸ்லிம்களின் ஆதரவைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒளிபரப்பு கன்னட மொழி பேசுபவர்களிடையே ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது. இதனை மதக்கலவரமாக சித்திரித்து ஆதரவைப் பெருக்குவதில் பாரதிய ஜனதாவும் முயன்று வருவதும், இந்திரா காங்கிரசின் வாக்குத் திரட்டலை பாதித்துள்ளது.

கர்நாடகத்தில் முன்னொரு காலத்தில் ஆழமாக வேருன்றியிருந்த ஜனதா தளம்,தேசியரீதியில தன்னைத் தானே இழந்துவிட்ட நிலையில் கர்நாடகத்திலும் குழம்பிப் போயுளளது. முன்னாள் முதல்வரும் ஜனதாதளப் பிரமுகருமான ராமகிருஷ்ண ஹெக்டே இம்முறை போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இங்கும் அதிமுக கோலார் தங்கவயல்,காந்திநகர் சிக்பேட்டை, பரந்நகர்,ஷிமோகா ஆகிய தொகுதிகளில் தனது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. இதனால் தமிழர்களின் வாக்குகள், காங்கிரசுக்கு கிடைக்காமல் செய்யும் ஒரு தடையாகவும் இது அமைந்துள்ளது.

இங்கும் காங்கிரசின் வேட்பாளர்கள் நரசிம்மராவின் தீவிர பரிசீலிப்பின் பின்பே தெரிவு செய்யப்பட்டனர். அரசியல பிரமுகர்களின் சிபாரிசுகள் புறக்கணிக்கப்பட்டன. முக்கியமாக மத்திய இரயில்வே அமைச்சர் ஜாபர் ஷெரிப்பின் இரண்டு மகன்களுக்கும் போட்டியிடசந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை இந்தவகையில் மிக மிக நுணுக்கமாக மக்கள் ஆதரவைப் பெறக்கூடியவர்கள் எனக் கருதப்பட்டோரே நரசிம்மராவினால் வேட்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

மொத்தத்தில், கர்நாடக-ஆந்திரா சட்ட சபைகளுக்கான தேர்தல் என்பது நரசிம்மராவைப் பொறுத்தவரை அவரது அரசியல் எதிர்காலத்தைப் பொறுத்தவரை ஒரு அக்கினிப் பரீட்சையாகவே கருதப்படுகின்றது.

பாராளுமன்றத்தில், மற்றைய கட்சிகளைப் பிளவுபடுத்தி அதன் மூலம் தனக்காதரவை பெருக்கிக் கொண்ட நரசிம்மராவின் ராஜதந்திர வேலைகள் கட்சிக்குள் தோற்றுப் போய்விட்ட நிலையில்

அவரது பதவிக்கு வைக்கப்பட்டுள்ள எதிர்த்தரப்பு குறிகள் பலப்படுத்தப்பட்டு வரும் நிலையில்-

கட்சியில் அவரது தலைமைத்துவமும்,பிரதமர் பதவியும் தொடரவேண்டிய காலத்தையும் இத் தேர்தல்களே தீர்மானிக்கும் என்றே கூறலாம்;

# மாவீரர் வார சிறப்பு சிறுகதை

## ஒன்றரைக்கால்

அந்தா ஒரு சின்னமேகம் பறந்து பறந்து போய்க் கொண்டிருக்குது. பாத்தீங்களா...... இதைப் பார்க்கிறதெண்டா எனக்கு நல்லாப் பிடிக்கும். அடிவானம் சிவப்பாக் கிடக்குது. ''சூரியன் பிறக்கப்போகுது'' எனக்கு நானே சொல்லிக் கொள்ளுறன். எத்தினை நாள் பார்த்தாலும் எனக்கு இது சலிக்கிறதே இல்லை. ஐஸ்கிறீம் குடிக்கிறதைவேண்டாமெண்டு அம்மாட்டை எப்பவாலும் நான் சொல்லி இருக்கிறனா? இல்லைத்தானே. அப்பிடித்தான் இதுவும். சூரியன் மிதந்து மிதந்துவாறதைப் பார்த்துட்டு இருக்க ஏனோந் தெரியா என்ரை கண் இரண்டாலையும் கண்ணீர் வழியும். இப்ப எல்லாம் பழகிடபேச்சு. நான் வளந்திட்டன. ஆனா அம்மா சொல்லுறவ. அடப்ப நான் சின்னப் பிள்ளையா, மூண்டு வயதில இருக்கேக்குள்ளயே அம்மாக்கு சொல்லுறனாம் ''அம்மா, அம்மா ஒரு காலில்லாத நானே இவ்வளவு பெரிய வேதினைப் படேக்குள்ள இரண்டு காலில்லாத சூரியன் எவ்வளவு பாவம் அம்மா'' எண்டு. ''இல்லை அப்பன் அம்மா இருக்கிறன் தானே பிள்ளைக்குக் காலா'' நான் கேட்ட கேள்விக்கு பதிலில்லாதது என்ரை ஞாபகத்தில நிறையவும் ஆழமாப் பதிஞ்சு போட்டு. ஏனெண்டா அவ்வளா நிறையத்தரம் நான் அதை அம்மாட்டைக் கேட்டிருக்கிறன்.

இப்ப எல்லாம்நான்பெரிசா வளந்திட்டன் ஏன் ஐஞ்சு வயசெண்டா சின்னப்பிள்ளையா? இந்த அம்மாக்குப் புத்தியிலை. அது கிடக்கட்டும். முந்தி ஒரு நாள் எல்லாம் பெரிய வண்டியும் வைச்சுக் கொண்டு அம்மா நிக்கிறதைப் பார்த்தா எனக்குப் பயம்மாகக் கிடக்கும். ஏன் எங்களைப் போல கொஞ்சமாத் தானே அம்மா சாப்பிடுற ஆனா ஏன் இம்மாம் பெரிய வண்டி வைச்சிருக்கிறா நான் அம்மாவைக் கேட்ட போது அவ தான் 'வவா'' வைச்சுருக்கிற விஷயத்தைச் சொன்னா அப்பவேயே எனக்குஅதுதான் யோசினை ''குட்டிவவா இரண்டு காலும் முளைச்சுப் பிறக்குமோ'' ஆனா நான் ஒருத்தரிட்டயும் கேக்கேலலை அவையள் ஒரு மாதிரிப் பார்ப்பினம் ஏனோந் தெரியா நான் காலைப் பற்றிக் கதைச்சா அம்மா கண் கலங்குவா. அவ அழுதா எனக்கும் அழுகை அழுகையா வரும் அதுக்கா வேண்டி 'நான் அதைப்'' பற்றிக் கதைக்காமலுக்கும் விட்டிட்டன்சின்ன சின்னச் சிட்டுக் குருவி எல்லாம் பறக்கேக்கையும் கூட நான் காலைத் தான் பார்ப்பன். அதுக்கு இரண்டு காலு இருக்குத் தானே அப்ப அது எவ்வளா சந்தோஷப்படும்? எனக்குள்ள சொல்லிக் கொள்ளுவன். மெல்லமாக தான்.

எனக்கெண்டா இரவுதான் எப்பவும் நல்லாப் பிடிக்கும் ஏனெண்டா பகலையும் விட இராத்திரில தானே நிறையவும் அமைதியாய்க் கிடக்கும் சத்தமே இல்லாத இரவில சாதுவா மினுங்கிற நட்சத்திரங்களை இருட்டுக்கை இருந்து பாத்திட்டு இருக்க எனக்குப் பிடிக்கும். ஆனா நான் நடக்கேக்கை கூட ''டக்டக்'' எண்டு சத்தம் கேட்கும் எதுக்கெண்டா எனக்கு ஒரு கால் மரக்கட்டை தானே அமைதியைக் குலைக்கிற இந்த ''டக்...டக்...'' சத்தம் எனக்கு எண்டாப் பிடிக்கிறதே இல்லை. இந்தச் சத்தம் கேட்காம இருக்கிறதுக்கு வேண்டி நெடுவும் இருக்கத்தான் எனக்கு விருப்பம் இருந்து கொண்டு என்னமாலும் எனக்குள்ள யோசிச்சுக் கொண்டிருப்பன் பகல்லையும் தான் ஆனால் பக்கத்து வீட்டு பிள்ளையள் எல்லாம் சேர்ந்து விளையாடுவினம் எனக்குத் தான் பார்க்க என்னமோ தொண்டைக்கு மட்டும் வந்து அடைக்கும். ஏன் அப்பிடியெண்டு நினைச்சுப் போட்டு எங்கட பாட்டீட்டைக் கேட்டுப் பார்த்தன் அவசொன்னா அதுதான் கவலையாம் எண்டு

நான் இப்ப நேசறிக்குப் போறனான். ஆனா முதல் வருப்பிலயே எனக்கெண்டா எல்லாரையும் வெறுத்துப் போச்சு அம்மா என்ரை கையைப் பிடிச்சுக் கொண்டு... நான் போகேக்கையே, நான் அம்மா சொல்லித்தந்தபடி, உப்பாணம் மூஞ்சியா இருக்காம நல்ல வடிவாய்ச் சிரிச்சன் உண்மைக்கும் அம்மா சொல்லுறவ, நான் சிர்ச்சா பூவிரிஞ்சாப்போலயாம் எண்டு ஆனா ஒருத்தரும் என்ர சிரிப்பைப் பார்க்கயே இல்லை அவையள் என்ரை ஒற்றைக் காலையும் மற்றக் காலுக்குப் பதிலா வெறுமாத் தொங்குற அரைக்காற் சட்டையையும் தான் பார்த்தவை. எனக்கு எண்டா ஏனடா போனம் எண்டு வந்துட்டு பேசாம இருந்திட்டுப் பிறகு... வீட்டை போய்... எங்கட வீட்டுக்குப் பின்னாலை ஒரு ஒற்றைத் தென்னை நிற்கு எல்லே... அதுக்கும் கீழ போய் இருந்து வெம்பி வெம்பி அழுதிட்டு... நானே ஆறுதல் படுத்திக் கொண்டு வந்திட்டன் ஏனெண்டா அம்மாக்கு முன்னால அழுதா என்னையும் விட அவ தான் கூடவா அழுவ எண்டு எனக்குத் தெரியும்.

அம்மா என்னையைத் தம்பியை விடவும் சரியான செல்லம். ஆனா எனக்குத் தான் ஒரு மாதிரிக் கிடக்கும். பார்த்துப் பார்த்து என்ரை காரியம் எல்லாம் அம்மா செய்யேக்கையும் கூட எனக்கெண்டா வேதனையாத்தான் கிடக்கும். ஆனா நான் காட்டிக்கொள்ளுறதில்லை அப்ப... வெள்ளெனச் சொன்னானெல்லா... அம்மா பெரிய வண்டி வைச்சிருந்தா எண்டு. ஒரு நாள் ராத்திரி நான் படுத்தாப் பிறவு அம்மா எங்கையோ வெளிக்கிட்டுப் போனா அப்பவோட எனக்குப் பெரிய கவலையாப்போச்சு ''அம்மாவும்இல்லாட்டி... காலில்லாம நான் என்ன செய்யிறடு?'' இராவு முழுதும் சக்கப்படாம அழுதிட்டுப்படுத்திட்டன். அப்பவேயே பாட்டீட்டைக் கேட்டிருக்கலாம் ஆனா அம்மா சொல்லித் தந்தவ ''மற்றவையை எங்களுக்காகக் கஷ்டப்படுத்தக் கூடாதாம்'' எண்டு. விடிஞ்சாப் பிறகு பாட்டீட்டைக் கேக்க'' வவா'' கொண்டு வரப் போனதெண்டு சொன்னா. நான் பார்த்திட்டே இருந்தன் அடுத்த நாள் அம்மா 'வவா''வைக்கொண்டுவந்தா ''ஏன் துணியால போர்த்தி இருக்கிறா?'' ''வவா'' க்கும் ஒரு கால் இல்லையோ? நானும் என்ரை காலைப் பார்க்காம இருக்கிறதுக்கு வேண்டி இப்பிடித்தான் துணியால போர்த்துட்டு இருக்கிறனான் ஆனா கிட்ட வந்தாப் பிறகு பார்த்தன் வவாக்கு இரண்டுகாலும் இருக்கு. அப்ப நான் பேசாம விலகிடபோட்டன். இரண்டு காலும் இருந்தா அவையள் என்னோட விளாட மாட்டினந்தானே.

அந்தண்டு எல்லாம் அம்மாவோட ஒரு மாமா வீட்டுக்குப் போனனான்; நடுவிலஒரு வாங்கு போட்டுட்டு அந்த மாமா படுத்திருந்தார். எல்லாரும் சுத்தி இருந்து அழுதவையள். எனக்கு எண்டா பெர்சா ஒரு சந்தேகம். ''அந்த மாமாக்கு இரண்டு காலும் இருக்குதத னே. அப்ப அவர் கவலைப்படார் தானே பிறகு ஏன் இவையல் அழுகினம்'' நான் பேசாம இருந்திட்டன் வழமை போல ஒருத்தரிட்டையும் கேக்கேல்லை

முந்தி எல்லாம் ''வவா'' பிறந்த வீடுகளுக்கு அம்மா போகேக்கைநானும் போவன். எங்கையாவது ஒரு வவா எண்டாலும் ஒற்றைக் காலும் மற்றக்கால் அரைவாசியும் முளைச்சுப் பிறக்காதோ எண்டு ஒரு நம்பிக்கை தான் ஆன எலலாவவாக்களும் இரண்டுகாலும்முளைச்சுப்பிறந்தா போல நான் இப்ப போகாமலுக்கும் விட்டிட்டன் வீட்டுக் கால வெளிக்கிடையும் எனக்குப் பிடிக்கிறதில்லை அப்ப... வீட்டில இருந்து படம் ஏதாவது பேப்பர் எல்லாம் பாத்துட்டு இருப்பான்.

அப்படித்தான் ஒரு நாள் கனக்கப்பக்கமா, வடிவுவடிவான கப்பல் படம் எலலாம் போட்டு வரும் ஒரு பெரிய பேப்பர். அதில படம் பாத்துட்டு இருந்தன். அப்பத்தான் ''அந்தப்'' படத்தை நான் பார்க்கேக்குள்ளை பாட்டி சொன்னது என்ரை காதில விழுந்தது. ''இந்த கரும்புலிப்பொடியன்ஒற்றைக் கால் இல்லாட்டிக்கும் எவ்வளாத்தை சாதிச்சுப் போட்டான்'' நான் கவனமாகப்பார்த்தன் மெல்லிசா... உயரமா...அந்தமாமா...மற்றவைக்குவிளங்காமஎன்னையை மட்டும் பார்த்து மெல்லமாச் சிரிச்சுக் கொண்டு... எனக்கெண்டா ஆயிரம் அம்புலி மாமாக்களைக் கூட்டி வந்து ஒண்டா நெஞ்சுக்குள்ள வைச்சது போல... பெரிசாச் சந்தோஷம் வந்திட்டுது. உடனேயே அந்தப் பேப்பரைப் பத்திரமா எடுத்துவைச்சிட்டு பாட்டீட்டை அவரைப்பற்றி விசாரிச்சன் ''இவங்கள் எல்லாம் நாட்டுக்காகச் செத்துப் போனாங்கள். ம்...'' பெருமூச்சோட பாட்டி சொன்னா ''அப்ப... அந்தண்டு நானும் அம்மாவும் போனமே அந்த மாமா போல... இவரும் செத்துப் போட்டாரா?'' 'ஓமடா கண்ணா ஆனா அவர் வாழ்ந்தாப்பிறகு செத்தவர் இந்தப் பிள்ளை செத்தாப் பிறகு வாழுறான்'' பாட்டி கண்ணெல்லாம் கலங்கிப் போக தன்ரை சுருங்கின உள்ளங்கையால மூக்கைத் தேய்ச்சு விட்டுக் கொண்டா ஆனாதொடர்ந்த கதையளில எனக்கு ஒண்டு மட்டும் நல்லாவிளங்கிப் போச்சு.

செட்ட ஆக்களிட்ட இருந்து நிறையப் பேரை இந்த மாமா காப்பாத்தினவராம் இப்பிடி நல்ல வேலை செஞ்சதால தான் இவரைத் தெரியாத பாட்டி கூட இண்டைக்கு இவருக்காஅழுறாபோல... ''செத்தாம் பிறகும் வாழுறது'' எண்டா இதுதான போல... ஆனா இவ்வளாம் நல்ல மாமாவைப் பாட்டி ''கரும்புலி'' எண்டு சொன்னா. ஆனா நான் இவரை அச்சாமாமா எண்டுதான் சொல்லப் போறன். மாமாவும் என்னையைப் போலதானாமே... அப்படியெண்டா... அப்பிடியெண்டா... நானும் என்ரை அச்சாமாமா போல.. 'செத்தாம் பிறவும் வாழவேணும்'' எனக்குள்ள சொல்லிச் சிரிச்சுப் போட்டு இருந்திட்டன். மெல்லமாத்தான்

முந்தி எல்லாம் எங்கட வீட்டு வாசல்படில காலைப் போர்வையால போர்த்துட்டு ...வேலிக்குக் கீழால பார்த்துட்டு இருக்க எனக்கு நல்லாப் பிடிக்கும். இரண்டு காலயும் நல்ல வடிவான சப்பாத்துப் போட்டுட்டுத் துள்ளித்துள்ளிப்பள்ளிக்கூடம் போற காலுகளில எனக்கு நல்ல விருப்பம். தினமும் இதைப் பார்த்துட்டுத்தான் நான் நேசறிக்குப் போறனான். இப்ப எல்லாம் அந்தச் சிவப்பு மட்டைல நான் ஒட்டிவைச்சிருக்கிற என்ரை அச்சாமாமாவைப் பார்த்துட்டிருந்தா போதும் எண்டாப் போல... ஒவ்வொரு நாளும் காலைல எழும்பி என்ரை அச்சாமாமாவைப் பார்ப்பன்; அவர் சிரிப்பார் மெல்லமா மல்லிகைப்பூ விரிஞ்சாப் போல... எனக்காகத்தான் அவர் அப்பிடிச் சிரிக்கிறவர் உண்மைக்கும் எனக்காத்தான்.

இப்ப நான் நெடுகவும் நெடுகவும் சிரிக்கிறனானாம் எண்டு சொல்லிச் சொல்லி அம்மா சந்தோஷப்பட்டவ. ஆனா அவேக்குத் தெரியா நான் என்ரை அச்சாமாமாவை நெனச்சுத்தான் சிரிக்கிறனான் இப்ப எனக்கு கொஞ்சம் கொஞ்சமா என்ரை வேலையள் நானே செய்யத்தான் விருப்பம் அச்சாமாமாவும் அப்படித்தானாமே செஞ்சவர். அப்ப என்னாலையும் ஏலுந்தானே முந்தி எல்லாம் எனக்குச் சரியான கூச்சம் மாதிரி ஆனா இப்ப அப்பிடி இல்லை அந்தக் ''கால்போர்சகிற சீலை''யைக் கூட நான் விசி எறிஞ்சிட்டன்.

இப்படித்தான் அண்டைக்கு என்ரை அச்சாமாமாவை மடியில் இருத்தி வைச்சு அவரையே பாரத்துட்டு இருந்தன் சிரிச்சுக்கொண்டுதான். ஏனெண்டா நான் சிரிக்கிறதுக்காக வேண்டித்தானே மாமா செத்துப் போட்டார் எண்டுபாட்டி சொன்னவஆனா... என்னமோந் தெரியா ...தற்செயலா அரைக்காற் சட்டைக்கு வெளில வரமாட்டாமா முடிஞ்சு போன என்ரை கால் கண்ணுல பட்டதும் ... கண்ணெலலாம் கண்ணீர் முட்டிப் போச்சு. ஆனா கண்ணீரைத் துடைச்சிட்டு ... பிறகு நான் சிரிச்சுக்கொண்டே இருந்திட்டன் நான் அழமாட்டன் இனியும் அழமாட்டான் அச்சாமாமா நெஞ்சுக்கை நிக்கிறார் பிறகு என்ன நான் அழுதா. பாட்டி சொன்னமாரி அவர் கவலைப்படுவர் தானே.

''அசோகன் இங்கை வாங்கோ, தம்பி 'வவா' வோட விளையாடுங்கோ ''அம்மா தான் கூப்பிடுறா எனக்கெண்டா விருப்பமில்லாமக் கிடக்கு'' இந்த மாமாவைப் பாத்துட்டு இருந்தாலே போதும். என்னையக் குழப்பாதேங்கோ'' எண்டு கோயில் திருவிழால பெரிசாச் சத்தம் போடுற ஏதோ ஒரு கோண் போலக் கத்தவேணும் போல கிடக்கு'' என்ரை கவலையைப் போக்கினவர் இந்த மாமாதானே என்னையைச் சிரிக்கப் பண்ணினவர் இந்த மாமா தானே எனக்கு இவர்தான் வேணும்'' எனக்குள்ள சொல்லிட்டுப் பேசாம இருந்திட்டன்.

சரஸ்வதி பூசை மாதத்தில. அதுதான் இந்த மாதத்தில எல்லாரும் தங்கட வீட்டுக்கு முன்னால வெள்ளைச் சிலை வீடு கட்டி. ஒரு கண்ணாடி மாமாவை இருத்திற வையள் எல்லோ அதுதான் இப்ப எங்கட நேசறிலயும் அந்த மாமாவை இருத்தி இருக்கினம் என்னமோ ... எனக்கு இந்த மாமாவையும் பார்க்கப் பார்க்க அச்சா மாமாபோல ஆசையாக இருக்கும் எல்லாரையும் போல எங்கட நேசறிமுத்தத்தில நிக்கிற மகிழ மரத்திலை பூப்பிடுங்கி இவருக்கும் போட எனக்கும் வானமளவு விருப்பம் '' இவரும்செத்தாப் பிறகும் வாழுறார் போல ... எனக்குள்ள நினைச்சிட்டுப் பாட்டீட்டைக் கேக்க அவ ''ஓமடாகண்ணா'' எண்டு சொன்னவ அப்பவேயே நான் நினைச்சுப் போட்டன் '' நானும் பூ வைக்கத் தான் வேணும்'' உண்மைக்கும்தான் இப்ப நான் நிறையவும் மாறித்தான் போனன்.

நேற்று ... எங்கட ரீச்சர் நேசறில நான் செஞ்சதைப் பார்த்துக் கண்கலங்கிக் கொண்டு நிண்டவ என்னெண்டா... நேற்று...நான் மெல்லமா நடந்து நடந்து போனன் இப்பஅந்த , டக்டக் 'சத்தம் எனக்கு நல்லாப் பிடிக்கும் அந்த ஒவ்வொரு 'டக்டக்'... இலயும் எனக்கு அச்சாமாமா தான் தெரியிறார் அப்ப... நடந்து போய்...மகிழமரத்து அடியில ஒரு கையால பிடிச்சுக் கொண்டு மற்றக் கையால என்ரை டக்டக் தடியை எடுத்துத் தட்டத் தட்ட நிறையவும் பூப்பூவா விழுந்து விழுற பூ எல்லாம் என்ரை அச்சாமாமா தான் மேல நிண்டு எறியிற மாரித்தான் எனக்கெண்டாக் கிடக்கு. பிறகு...டக்டக் தடியை மரத்திலசாத்தி வைச்சிட்டு... ஒருகை முட்டவும் மகிழம் பூவை எடுத்துட்டு... நடந்து போய் கண்ணாடி மாமாவுக்கு முன்னால பரத்திப் போட்டன் 'டக்டக்'தடியோட தான் சாமிக்குப் பூப் போட்டா அம்மா கும்பிடுறவ எல்லே. உடனமும் நானும் கண்ணை மூடிக் கொண்டு... கும்பிட்டுக் கொண்டு ...நான் இப்ப வழக்கமா சாமிட்டைக் கேக்கிறதைக் கேட்டன்'' என்ரை அச்சாமாமாபோல... நானும் செத்தாம் பிறகும் வாழவேணும்...''

வீட்டை போன உடனம் நான் என்ரை அச்சா மாமாவைப் பார்த்துட்டு, அந்த வேலை செய்யத் தொடங்கிட்டன். அதுதான் இப்ப பாட்டின்ரை வெள்ளைச் சிலை எடுத்து ''அந்தவீடு'' கட்டிப் போட்டு உள்ளுக்கை என்ரை குட்டிக் கதிரையை எடுத்துப் போட்டுட்டு ஏறி இருந்து பார்த்தன் பிறகு...சாமிப்பட விளக்கையும் கொண்டாந்து வைச்சிட்டு ... சாப்புராணியும் கொளுத்தி வைசிட்டு... கொஞ்சம்பூவும் பிடுங்கி வந்து எனக்கு முன்னால போட்டுட்டு ...ஏறி இருந்தன். அது தான் இந்தா இப்ப இருந்து கொண்டிருக்கிறன். அச்சாமாமாவையும் மடில வைச்சுக் கொண்டுதான். எனக்கெண்டாந் தொங்கித் தொங்கிப் பார்க்க வானம் கைல முட்டினா எப்பிடிச் சந்தோஷமாக கிடக்கும் அப்பிடித்தான் கிடக்கு அப்ப தான் பாட்டி வந்து பாத்துட்டு, கண்ணாடியையும் கழட்டிக் கைல வைச்சுக் கொண்டு கேக்கிறா ''என்னப்பன் செய்யிறா'' எண்டு நான் சொன்னன் ''நானும்என்ரை அச்சாமாமா போல செத்தாப் பிறகும் வாழப் போறன்'' அதுதான் இப்பயே செஞ்சு பார்க்கிறன் எண்டு பாட்டி ஒடிவந்து என்னையைத் தூக்கிக் கொஞ்சிப் போட்டு தோளில வைச்சுக் கொண்டு நடக்கிறா ''வளர்ந்தாப்பிறகு என்ரை அசோகன் செய்வன் தானே' சொல்லிக் கொண்டு பாட்டி நடக்கிறா பாட்டின்ரை தோளிலை சாஞ்சு படுத்துக் கொண்டு நான் கைல வைச்சிருக்கிற அச்சாமாமாட்டை சிரிச்சுக் கொண்டு சொல்லுறன்'' உண்மைக்கும் தான் மாமா... வளர்ந்தாப்பிறகு நான் செய்யத்தான் போறன் மாமா...''

சாரங்கா சதாசிவமூர்த்தி

---

# -இளையவனின்: 'வீடு' ஒரு பார்வை....

சமீபகாலமாக ஈழத்தில் மலரும் புத்திலக்கியங்கள் யாவும் இந்த மண்ணின சமகால நிகழ்வுகளையும் அதன் பரிமாணதை சிததிரிப்பவை யாகவுமே உள்ளன.

ஒரு தசாப்த காலமாக ஈழத்தில் விடுதலைக்கான மாபெரும் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிலையில் தேசிய இனப்பிரச்சினை சார்ந்த கதைகள் படைக்கப்படுகின்றமை மண்ணின் அவசிய தேவையாகிவிட்டது.

படைக்கப்படும் ஆக்க இலக்கியங்கள் அச்சில் நூலுருவாக்கமடைவதில் உள்ள சிரமம், உழைபபு பெரியன. இவற்றை மீறி ஏகப்பட்ட இலக்கிய நூல்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன. இது இந்த மண்ணின்வியர்வைக்குக்கிடைத்த விளைச்சல்.

இந்த வகையில் -

தமிழ்த்தாய் வெளியீட்டகத்தால் சமீபத்தில் இளையவன் எழுதிய வீடு என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

இந்த நூலைப்பற்றி முதலில் பெருமையாகச் சொல்ல வேண்டிய விஷயமே அதன் முகப்பு அட்டையும் ஓவியமுமே. வெளிநாட்டு நூலுக்கு நிகராக மிக அற்புதமாக முகப்பு அட்டை அமைந்துள்ளது. தவிர, நூலின் வடிவமைப்பே சிறபபுத்தான்.

15 சிறுகதைகள் கொண்ட நூலில் சமகால வாழ்வின் யதார்த்தம் எதுவித பிரசார வாடையும் அற்று பதிவு செய்யப்பட்டுள்ளன.

உள்ளடங்கும் கதைகளை கொஞ்சம் அலசிப்பார்த்த போது, இந்த நூலுக்கு 'வீடு' என்று மகுடமிட்டது பொருத்தமெனவே படுகின்றது. அந்தளவிற்கு 'வீடு பற்றிய நிறைவுச்செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

'விட்ட போவம்' - 'ஒரு இமைப்பொழுது' - 'புதிய தொரு, திசையிலே ......' - 'வீடு' ஆகிய கதைகள் வீட்டின் தேவையை-அதன் அவலத்தை- பெருமையைச் சொல்கின்றன.

'உறங்கும் கோபங்கள்' என்ற முதல் கதை கூட மலையகத்தில் உள்ள தொழிலாளர்களின் வீட்டுத் தேவையையும் அடக்கப்பட்டு சுரண்டப்படுகின்ற வர்க்கத்தில் அங்கம் வகிக்கும் மக்களிடையேயிருந்து கிளர்ந்தெழும்பு ரட்சியுணர்வையுமே சொல்கின்றது.

'விட்ட போவம்' கதையிலும் இடம் பெயர்வு வாழ்வின் அவலம் சித்திரிக்கப்பட்டுள்ளது.

'ஒரு இமைப் பொழுது' கதையில் கனவுடன் கட்டி முடிக்கப்பட்ட வீடு-கண்முன் விமானக் குண்டு வீச்சிற்கு கறுகிவிலாகும் சோகம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

'புதிய தொரு திசையிலே... கதையில் எமக்கென்றொரு நாடு இல்லாமல் வீடு இருப்பதும் அவ்வீட்டில் வாழ்வின் ஜீவிதமும் உத்தரவாதமற்றே இருக்கும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

'வீடு' கதையிலும் வீடு மீதான பற்றும் அதை அத்தியாவசிய தேவைக்குக் கூட பிறருக்கு பயன்பட அனுமதிப்பதில் நம் சமுதாய சூழலில் உள்ள சிரமத்தை நூலாசிரியர் மிக யதார்த்தமாக சித்திரித்துள்ளார்.

இன்றைய காலத்தை-இந்த மண்ணின் செய்திகளை இக்கதைகளில் அறிந்து கொள்ள முடியும்.

'உயிரின் தடிப்பு' கதையில் சக போராளி வீரச் சாவடைந்த செய்தியை வீட்டாருக்கு சொல்லச் செல்லும் போராளியின் மனோநிலை வெளிப்படுத்தப்படுகின்றது ஏற்கனவே இதைப் போன்றதான பல அனுபவம் உண்டாயினும் அதில் உள்ள சங்கடம்...தவிப்பு... கண்ணீர்......

கதையின் இறுதியில்- 'போராட்டத்தில் இழப்பு வருவது இயல்புதானே...' என சாதாரணமாக அந்தச் செய்தியை ஏற்றுக் கொள்ளும் வீட்டாரின் பக்குவம்... மனத்திடம்... யதார்த்தம்... அற்புதம்...

வவுனியா திலீபன்

'முத்திரையிடப்பட்ட உறவுகள்' 'போதனை' என்ற கதைகள் இரண்டும் ஒரே விஷயத்தை சித்திரித்துக் காட்டுகின்றன. அருகில் நிற்கும் உறவுகள் அற்பமாகவும் தூரத்து உறவுகள் அற்புதமாகவும் படும் மனித மனோநிலையை நூலாசிரியர் கலைச்சுவையுடன் படைத்துள்ளார்;

'தொலைந்து போன நாட்கள்' கதை 'விட்ட போவம்' கதையுடன் சம்பந்தப்படுகின்றது. அதில் சிறுவனின் ஏக்கம்; இதில் முதியவரின் ஏக்கம்,

வாழ்ந்த வீட்டுமுற்றத்தை, வளவை, கிணற்றடியை நேசித்த மரங்களை, புழுதி வாசத்தை பிரிந்து வந்து வேறொருவரின் அலைது வேறொரு இடத்தில் தங்கி வாழ்வை நத்தையைப் போன்று நகர்த்தும் அவலம்... சோகம்... பெரிய ரணம்.

இந்தத் தொகுப்பில் உள்ள 'கையில் கிடைத்த கடிதம்' கதையை ஆசிரியர் சொல்லும் விதம் அருமை. பயிற்சி முகாமில் உள்ள இளைஞன் தன் இதய தாகத்தை வெளிப்படுத்தியும் வீட்டாரின் புத்தியை மாற்றும் படி கோரியும் எழுதும் கடிதமாக அக்கதை நகர்த்தப்படுகின்றது.

ஆயினும் சிறுகதைக்குரிய இறுக்கத்துடன் உத்தியுடன் கலா பூர்வமாக அனைத்துக் கதைகளும் படைக்கப்பட்டுள்ளன என்று கூறுவதற்கில்லை. மேற்குறிப்பிட்ட சில கதைகள் சமகாலத்தையும் அதன் தெறிப்பையும் நன்கு பதிவு செய்துள்ளன. உள்ளவகையில் இந்நூல் சிறப்பானது.

---

## மாவீரர் நினைவாக

### வித்தாய் விழுந்து சத்தாய் விளைந்தவர்

- எடுப்பு -

வித்தாய் விழுந்து இத்தாய் அகத்தின்
சத்தாய் விளைந்து பலமாகி;
அப்பால் உயர்ந்து எப்போதும் ஈழம்
தப்பாமல் காத்த மாவீரர்
(வித்தாய்)

- தொடுப்பு -

முற்றாய் மலர்ந்த வற்றா உணர்வில்
பற்றோடு நின்று பயனாகி
செற்றோர் செருக்கைச்செற்றே அவர்கள்
அற்றேக வைத்த அரும்வீரர்
(வித்தாய்)

- முடிப்பு -

வற்றாதிவ் வாற்றல் உற்றேகி வாழச்
சற்றேனும் மக்கள் தளராது.
ஒற்றாக நின்று கட்டாயம் ஈழம்
பெற்றாக வேண்டும் என ஓர்வம்
(வித்தாய்)

அஞ்சாது இருந்து நெஞ்சார வாழ்த்தி(த்)
துஞ்சாது அவர்க்கு மலர்தூவி
விஞ்சாத புகழில் சஞ்சார மாகி
எம்தேசம் வாழப் பணிவோமே!
(வித்தாய்)

- முருகனடியான்

# பிரதி அமைச்சர்களின் நியமனம்; சந்திரிகா எதிர் நோக்கிய நெருக்கடி

செவ்வாய் காலை, அலரி மாளிகையில், பல வண்ணக் கார்கள் வந்திறங்கிய வண்ணமிருந்தன. பிரதி அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்ய வந்தவர்களின் சிலரது முகங்களில் மாத்திரமே சந்தோஷம் வெளிப்படையாக தெரிந்தது. இதற்கு முன்னர் அவர்கள் வைத்திருந்த அமைச்சுக்களே அவர்களுக்கு வழங்கப்பட்டதும் சிலருக்கு கூடிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டமையும் இதற்கு காரணமென பிரபலசிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் கூறுகின்றார்.

பிரதமராக சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்றபோது செய்து கொண்ட பிரதிஅமைச்சர்கள் பட்டியலைவிட இம்முறை ஜனாதிபதியான பின் அதிகம் சிரமப்பட்டே பட்டியலை அவர் தயாரிக்க வேண்டியிருந்தது. இந்த நியமனங்களின் இழுபறிநிலை உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியாகும் வரை இருந்ததாக அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

பொது ஜனஐக்கிய முன்னணிக்குள் உள்ளடங்கும பல கட்சிகளினதும் விருப்புவெறுப்புக்களை அனுசரித்தே அவர் நியமனங்களைவழங்கவேண்டி இருந்தது தேர்தல் கொள்கைப் பிரகடனத்தின்படி, அமைச்சுப் பொறுப்புகளை அதிகரிக்க முடியாமலும், அதேவேளை, எல்லாத் தரப்பினருக்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டிய நிலையும் சந்திரிகாவுக்கு ஏற்பட்டு, அனைவரையும் திருபதி செய்வதே அவரது நோக்கமாகவும் இருந்தது.

நிமலராஜன்

பிரதியமைச்சர் நியமனங்களே பாராளுமன்றத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுதிப்பாட்டை தெளிவாக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவித்திருந்தனர் இந்தநிலையில சந்திரிகா அளித்த நியமனங்கள் பலரையும் திருப்திப்படுததத் தவறியதாகவே உள்ளதாகக் கருதப்படுகின்றது. இதற்குப் பதிலளித்த அவர் என்னால் இயன்றதைச் செய்துவிட்டேன். எல்லோரையும் திருப்திப்படுத்துவதென்பது முடியாத விடயம். குறைகள்இருப்பின் அதனை எனக்கு அறிவித்தால் அதனைத் தீர்க்க தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாக பதவியேற்ற இரண்டு தினங்களில் கபினட்டை அமைத்த அவரால் பிரதி அமைச்சர் நியமனங்களை வழங்க எட்டு தினங்களுக்கு மேல் சென்றதும் குறிப்பிடத் தக்கதாகும்.

வரையறுத்துக்காட்டி இருபது அமைச்சர் இதற்கான இருபது பிரதி அமைச்சர்களுக்கு மேல் நியமிக்கப் போவதிலலை எனக்கூறியசந்திரிகா குமாரதுங்கா ஐம்பத்தியிரண்டு அமைச்சர்களைக் கொண்ட தனது அமைச்சரவையை அமைத்திருப்பதன் பின்னணி அவருக்குள்ள நெருக்கடிகள் தான் என காரணம் கூறப்படுகின்றது. முதற்தடவை இருபத்தைந்தாக இருந்த பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை முப்பதாக உயர்த்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பிரியங்கனி அபேவீரா, ஹேமா ரட்ணாயக்கா, லக்ஷ்மன் கிரியல்ல, றெஜிரணதுங்க, ஜோன்செனவிரட்ணா ஆகியோர் புதிதாக நியமனம் பெற்றவர்களாவர்.

கபினட் அமைச்சர்கள் இருவருக்குபிரதி அமைச்சுப்பொறுப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த அமைச்சுக்களான பாதுகாப்பு, நிதி ஆகிய இரண்டும் கபினட் பொறுப்பு ஜனாதிபதியிடம் உள்ளமையும் கவனிக்கத்தக்கது.

இதேவேளை நீதி அரசியலமைப்பு விவகாரம் வெளிநாட்டு வர்த்தகம் ஆகிய கபினட் பொறுப்புள்ள அமைச்சுக்களை கவனித்து வந்த பேராசிரியர் ஜீ எல் பீரிசுக்கு பிரதி நிதி அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டு 'வெளிநாட்டு வர்த்தகம் அவரிடமிருந்து எடுக்கப்பட்டுள்ளது எக்ஸ்போ-94 போன்ற வெற்றிகரமான வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்கான தளங்களை ஏற்படுத்தி தந்தவரிடமிருந்து இப்பொறுப்பு அகற்றப்பட்டது கேள்விக்குரியதாகவுள்ளது. பிரதி நிதி அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டாலும் நிதி அமைச்சின் பெரும் பொறுப்பை இவரிடமேவிட்டு விட சந்திரிக தீர்மானித்திருக்கலாம். இதன் காரணமாகவே அவரது சுமை ஒன்று குறைக்கப்பட்டது எனவும் இதற்கு காரணம் கூறப்படுகின்றது.

சந்திரிகா குமாரதுங்காவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கிங்ஸ்லி விக்கிரமரட்ண விடம் வெளிநாட்டு வர்த்தகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர்களின் மாற்றப்பட்ட பொறுப்புக்களைக் கருதின், கம்பஹா மாவட்டத்தில் சந்திரிகா குமாரதுங்காவுக்கு அடுத்தபடியாக ஆகக் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளேயிடமிருந்தும் நிதிப் பிரதி அமைச்சு பொறுப்பு பறிக்கப்பட்டுள்ளமை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

'எனக்கு அடுத்த படியான விருப்புவாக்குகளை பெற்ற லக்ஷ்மன் ஜெயக்கொடிக்கு கபினட் அந்தஸது வழங்கப்பட்ட நிலையில் எனக்கு ஏன் அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படவில்லை' என ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே சந்திரிகாவிடம் முறையிட்டபோது ஜனாதிபதியாக தான் பதவியேற்கும் போது தனது அமைச்சுக்களில் ஒன்றை தருவதாக சந்திரிகாவல் கூறப்பட்டது.


இன்று அந்த நிலையுப் போய், இருந்த பிரதி அமைச்சுப் பொறுப்புக்களில் ஒன்றும் பறிக்கப்பட்ட நிலையில் ஜெயராஜ் பெர்ணண்டோ புள்ளே உள்ளார்.

ஏமாற்றமளிக்கப்பட்ட முடிவுகளைப் பெற்றவர்களில் தொண்டமான், சந்திரசேகரன் சிறிமானி அத்துலத்முதலி

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பிராமி மட்பாண்டச் சாசனம் கந்தரோடையிலிருந்துமீட்பு

புராதன நாகதீபத்தில் (யாழ்ப்பாணக் குடாநாட்டில்) மறைந்துபோன திராவிடநாகர் மரபினை சான்றாதாரங்களுடன் அடையாளம் காணும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் முதனிலை ஆய்வுகளின் போது. கந்தரோடையிலிருந்து மேலும் ஒரு மட்பாண்டச் சாசனத்தினை மீட்டுக்கொள்ள முடிந்தது. இச்சாசனம் கறுப்பு - சிவப்பு மட்பாண்டக் கலண்டு ஒன்றில் (Black & Red Ware) பொறிக்கப்பட்ட முறையில், புராதன தொழிற்பட்டறை ஒன்றின் தரைப பகுதியில் பாவப்பட்டிருந்த செங்கற் பரப்பிலிருந்தே மீட்டெடுக்கப்பட்டது ஏற்கனவே இப்பட்டறைப்பரப்பிலிருந்து 'அ','உ' பொறிக்கப்பட்ட தமிழ்ப்பிராமி எழுத்துக்களையுடைய மட்பாண்டத் துண்டுகளும், லக்ஷ்மி நாணய மொன்றும் மீட்டெடுக்கப்பட்டதுளன்பதும்நினைவு கூரத்தக்கது.



கிடைத்த இப்பிராமிச்சாசனம் 'ஆபதி' என்ற வாசகத்தினை பூரணமாகவும் மிகத் தெளிவாகவும் கொண்டுள்ளது. இதனை தொடர்ந்து 'எ' என்றபிராமிஎழுத்து ஆரம்பிக்கின்றது. தமிழ்ப்பிராமி வரிவடிவ முறையில் 'எ' என்ற எழுத்து முக்கோண வடிவில் இங்கு பொறிக்கப்பட்டுள்ளமை இப்பிராமிச்சாசன முறைமை / வகையை கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

# மேற்குலகில் ஈழத்தமிழர்கள் மறையும் பண்பாடும்; தொடரும் அடிமைக் கோலமும்


வெளிநாடுகளில் தங்கியுள்ள தமிழர்கள் ஆடம்பரமாக வாழ்கிறார்கள் என்பதை விட அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று தான் கூற முடியும். உயிரை வெறுத்து சம்பாதிக்கும் பணத்தைத் தமதுஅந்தஸ்தை உயர்த்திக் காட்டும் வரட்டுக் கௌரவத்திற்காக செலவிட்டு வருகின்றனர், என்கிறார் யாழ் கத்தோலிக்க திருச்சபையின் குரு முதல்வர் அருட்திரு எஸ். ஜே; இம்மானுவேல அவர்கள். அண்மையில் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்கு சென்று திரும்பிய அவரிடம் ஐரோப்பிய நாடுகளில் நமது தமிழ்மக்களின் நிலைப்பாடு குறித்து 'வெள்ளி மஞ்சரி' வாசகர்களுக்காக சந்தித்தோம். இச்சந்திப்பின்போது அவர் வழங்கிய பேட்டியை இங்கு தருகிறோம்.

**கேள்வி:-** அண்மையில் சில ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று திரும்பியுள்ளீர்கள். எந்தெந்த நாடுகளுக்கு என்ன நோக்கத்திற்காகச் சென்றீர்கள் என்று கூறமுடியுமா?

**பதில்;-** கனடா, பிரான்ஸ், சுவிஸ், பிரிட்டன், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு மூன்று மாதகால சுற்றுப் பயணம் மேற்கொண்டேன் ஜேர்மனியில் உள்ள மிசியோ (Missio) எனும் கத்தோலிக்க சமய ஸ்தாபனத்தின் அழைப்பின் பேரிலேயே இங்கிருந்து சென்றேன். எமது நாட்டின் பிரச்சினை குறித்து ஜேர்மனி நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு ஜேர்மன் மொழியில் பேசுவதற்காக அழைத்திருந்தனர். அங்கே என்னுடன் இரு இந்தியர்களும் 7 ஆபிரிக்கர்களும் வந்திருந்தனர். இவர்கள் ஆயர்களும் பேராசிரியர்களுமாவர். எமது தமிழ் மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களது நிலைமைகளை அறிந்து கொள்வதற்காகவே மற்றைய நாடுகளுக்குச்சென்றிருந்தேன்.

**கேள்வி:-** தமிழ்மக்கள் அங்கே எமது கலாசாரங்களைப் பின்பற்றுகிறார்களா?

**பதில்;** இவர்கள் தமிழ் நாட்டிலே எமது கலாசாரங்களைப் பின்பற்றுவதுபோல வாழும் நாடுகளில் பின்பற்ற முடியாது. இருந்தும் சில சில ஸ்தாபனங்கள், இளைஞர்கள் ஒழுங்கு செய்து சில சில விழாக்களைக் கொண்டாடுகின்றார்கள். இவர்கள் மேற்குலகில் பரந்துபட்டே வாழ்கின்றனர். ஒன்றிணைந்து வாழ்வதில் சிக்கல்கள் உள்ளன. அதனால் கலாசாரங்களை பேணுவது கடினமாகவேயுள்ளது. இவர்களில் கனடாவில் மட்டும் ரொறன்ரோ நகரில் ஆயிரக்கணக்கான தமிழர் வாழ்கின்றனர். இவர்கள் ஓரளவு கலாசாரத்தை காப்பாற்றி வருகின்றனர். இவர்கள் பத்து ஆண்டுகளுக்குள்ளேயே அங்கு



சென்றுள்ளனர். அதிலும் வயதுமுதிர்ந்தவர்கள் நடுத்தர பெற்றோர் இளைஞர்கள் என பல பிரிவினராகவுள்ளனர். இளைஞர்கள் பாடசாலைகளுக்கு செல்கின்றனர். அங்கே விசேட தமிழ் வகுப்புக்கள் நடக்கின்றன. பெற்றோர் தமிழ்கலாசாரத்திற்கு ஏற்ப சிறு சிறு அளவுகளில் திருமணவைபவம், பிறந்ததினம் போன்றனவற்றை நடத்துகின்றனர். வயது முதிர்ந்தவர்கள் மாலை வேளைகளில் சந்தித்து தமக்குள் கலந்துரையாடுவர். இவை கோடை காலத்தில் மட்டுமே சாத்தியமாகின்றன. குளிர்காலத்தில் ஒதுங்கி விடுகின்றனர். பிரான்ஸ், இங்கிலாந்திலும் இது ஓரளவு கடைப்பிடிக்கப்படுகிறது. ஜேர்மனி, சுவிஸில் ஆகியவற்றில் கடைப்பிடிக்க முடியாதளவிற்கு அனைவருமே சிதறிவாழ்கின்றனர்.

**கேள்வி:** எப்படியான ஓர் சூழ்நிலையில் இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்?

**பதில்;** பல தரப்பட்ட சமூகங்களிடையே பின்தள்ளப்பட்ட, கொத்தடிமைகள் போன்ற ஓர் நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு மொழிப் பிரச்சினையே பெரிய பிரச்சினையாகவுள்ளது இவர்கள் ஆங்கிலம் பேசுவது தமது அந்தஸ்தை உயர்த்தும் என்ற ஓர் போலி சிந்தனையுடையவர்களாகவுள்ளனர். இதனால் தமது பிள்ளைகளுக்கு வேற்று மொழிகளை கற்பிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழ்மொழி பேசுவதை ஓர் கௌரவக் குறைவாக கருதுகின்றனர். தமக்கு மொழி புரியாவிட்டாலும் பெரும் சிரமப்பட்டு பிள்ளைகளுடன் மேற்கத்தேய மொழிகளிலேயே பேச விரும்புகின்றனர். ஏனெனில் பிள்ளைகள் தமிழை கற்று விடுவார்கள் என்ற பயம் அவர்களிடம் குடிகொண்டுள்ளது இந்நிலை மாற வேண்டும் அவர்கள் வீடுகளில வது தமது பிள்ளைகளுடன் தமிழில பேசவேண்டும என நான் நேரடியாகவே அவர்களுக்கு அறிவுறுத்தினேன்

**கேள்வி:** கல்வியில் பாரபட்சம் காட்டப்படுகின்றார்களா?

**பதில:** அப்படி பாரபட்சம் காட்டப்படுவதாக நான் அறியவில்லை பல இளைஞர்கள் கல்வி கற்பதை கண்டிருக்கிறேன். நோர்வே போன்ற நாடுகளில இவர்கள் கற்கவேண்டும் என வற்புறுத்தப்படுகிறது. ஆனால் மற்றைய நாடுகளுக்கு செல்வோர் பணம் சம்பாதிப்பதில் குறியாக இருப்பதால் அவர்கள் தாமாகவே கற்பதிலிருந்து ஒதுங்கி விடுவதாக அறிகிறேன்.

**கேள்வி:** இங்கு வாழும் தமிழர்களுடன் அவர்களை ஒப்பிட்டுக் கூற முடியுமா?

**பதில:** இங்குள்ளவர்கள் ஒரே சமூகப் பின்னணியைக் கொண்டு அதற்குள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சிறந்த ஒரு கட்டுக் கோப்புக்குள் நின்று வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அங்குள்ளவர்கள் காய்ந்த மாடு கம்பிலே விழுந்த நிலையில பெற்றோரின் பிடியிலிருந்து விடுபட்டதும் சுதந்திரம் கிடைத்து விட்டதாக கருதிக்கொள்கின்றனர். கட்டுப்பாடு எதுவுமற்ற நிலையில் அந்தந்த நாட்டின் சுதந்திரங்களை தமக்கு சாதமாக்கிக் கொண்டு தீய வழியிலே சென்று கொண்டிருக்கின்றனர். எமது சமூகக் கட்டுக் கோப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர்களாகவே காணப்படுகின்றனர்

**கேள்வி:-** இவர்களுக்கு சகல துறைகளிலும் சம அந்தஸ்து வழங்கப்படுகின்றதா?

**பதில்:-** எமது மக்கள் அந்நிய நாட்டிலே தொழிலுக்காக, ஊழியத்துக்காக கூலிப்படைகளாகவே வாழுகின்றனர் சமூகம் அவர்களைத் தமக்குத் தேவை என்று கருதுகிறது ஏனெனில் எவருமே செய்ய முடியாத மூன்றாம் மட்டத்தொழில்களை எல்லாம் இவர்கள் பணத்துக்காக செய்ய தயாராக இருக்கின்றனர்.

அந்த நாட்டு மக்கள் சிலர் இவர்கள் வெளியேற வேண்டும் என கடும் எதிர்ப்புக் காட்டி வருகின்ற போதிலும் ஒரு பகுதியினர் இவர்கள் இல்லாது தம்மால் சீவிக்க முடியாது என வெளிப்படையாகவே கூறிவருகின்றனர். ஏனெனில் இவர்கள் செய்யும் வேலையை செய்ய ஏனைய வெளிநாட்டவர்கள் தயாராக இல்லை என்கின்றனர்.

**கேள்வி:-** எப்படியான வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன?

**பதில:-** தமிழர்கள் எவ்வளவு தான் படித்தாலும் அவர்களுக்கு வழங்கப்படும் அதி உயர் வேலை வாகனம் செலுத்துவதாகவே உள்ளது. இரண்டாம் மூன்றாம் தர கூலி வேலைகள் தான். எந்த சந்தர்ப்பத்திலும் உயர்பதவிகளை வழங்க அவர்கள் தயாராக இல்லை. அந்நியர் அந்நியராகவே கணிக்கப்படுகின்றனர் பணத்துக்காக இவர்கள் இயந்திரங்களைக் கொண்டு செய்யும் வேலைகளை தமதுஉடல்வலுவைக் கொண்டு செய்து முடிக்கிறார்கள். இதனால் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே இவர்கள் நோய் வாய்ப்பட நேரிடுவதுடன் ஆயுள் குறைந்தவர்களாக மாறவும் வாய்ப்புண்டு.

**கேள்வி:-** இவர்களுக்கான வேலை வாய்ப்புகள் எவ்வாறு உள்ளன?

**பதில:-** மேற்குலக நாடுகள் சிலஒன்றிணைந்து தமக்கெனவொருமொழி, கடவுச்சீட்டு போன்றனவற்றை பயன்படுத்தவும் பொருளாதார நிலையில உயரவும் தீர்மானித்துள்ளன.

இதனால் தமக்குள் வேலை வாய்ப்ப அற்றிருப் போருக்கு முன்னுரிமைகளையும் சலுகைகளையும வழங்கி வருகின்றனர்- இவர்கள் இத்தகைய கொள்கைகளைக் கடைப பிடிப்பதால் மூன்றாம் உலக நாடுளில் இருந்து சென்றோருக்கான வேலை வாய்ப்புகள் குறைந்து கொண்டே வருகின்றன. இதனாலேயே இவர்கள் மிகவும் கடினமான வேலைகளைக்கூட விரும்பியோ விரும்பாமலோ செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். அவர்கள் அங்கு கிடைக்கும் அகதிப் பணம மற்றும் மகப்பேற்றுக்கான உதவிகளை மீதப்படுததியே சம்பாதிக்கின்றனர் சிலர் சூதாட்டம் மற்றும கேளிக்கைகளில் கூட பெருமளவு பணத்தை இழந்து வருகின்றனர். இதிலிருந்து விடுபட்டு சம்பாதிப்பவர்கள் ஒரு சிலரேயுள்ளனர். இப்படியெல்லாம் அவர்கள் உயிரை வெறுத்து உழைப்பதை இங்குள்ளவர்கள் உணர்ந்து கொள்ளத் தவறிவிடுகின்றனர்

> பத்து ஏக்கர் காணியிலே பலவித நவீன வசதிகளுடனும் இங்கே வீடுகளைக் கட்டி உல்லாசமாக வாழ்ந்தவர்கள் அந்நிய மோகத்தில் அள்ளுண்டு மேலைத்தேய நாடுகளிலே பதினைந்தாம் மாடியிலே பத்தாவது அறையிலே முடங்கிக் கிடக்கின்றனர் சிறகொடிந்த பறவைகள் போல் சிக்குண்டிருக்கும் இவர்கள் மனவலைகளை வெறும் வார்த்தைகளில் வடித்துவிட முடியாது.

**கேள்வி:** வெளிநாடுகளில் வாழும் இவர்கள் அங்கு தாம் சென்றதன் நோக்கை அடைந்துவிட்டார்களா?

**பதில்:** பணம் சம்பாதிப்பதுதான் இவர்களது அடிப்படைநோக்கமாக இருக்கிறது ஆனால எதிர்பார்ப்பது போல்பெருமளவில்உழைக்கின்றபோதிலும இவர்களால சேமிக்க முடிவதில்லை அந்தந்த நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத தரத்திற்கு ஏற்ப, இவர்கள் தமது தகுதியையும் அங்கு சென்ற நோக்கையும் மறந்து பகட்டு வாழ்க்கை வாழ முற்படுகின்றனர். இதனால இவர்கள் கார், தொலைக் காட்சி என பலதரப்பட்ட வசதிகளைக் கொண்டுள்ள போதிலும் கடனாளிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் இரவு பகல் பாராது உழைத்தால் தான் ஓரளவு மீதப்படுத்த இவர்களால் முடிகிறது. இவ்வாறு மீதப்படுத்தும் பணத்தைக் கொண்டு சீட்டுப் பிடித்தே வீட்டுக்கு சிறுதொகையை இவர்களால அனுப்ப முடிகிறது. இதை புரிந்து கொள்ளாத பெற்றோர் இங்கிருந்தபடி பெருமளவு பணத்தை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர்.

**கேள்வி:** இவர்கள் தற்போது எப்படியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்?

**பதில்:** பெரும்பாலானவர்களுக்கு இயந்திர வாழ்க்கை அலுத்து விட்டது அவர்கள் நாட்டில் நல்ல சூழ்நிலை உருவானால் திரும்பி வரவே விரும்புகின்றனர். இவர்கள் வெறும் கையுடன் வருவதில் எதுவித பயனும் கிடைக்கப் போவதில்லை ஏதாவது தமது எதிர்காலத்திற்குரிய மூலதனத்துடன் தான் இங்கு வர வேண்டும். அப்படிவந்தால சிறு தொழில்களையாவது செய்து கொண்டு வாழ்க்கையை ஓட்டக் கூடியதாக இருக்கும். இதை நான் அவர்களுக்கு நன்கு உணர்த்தியுள்ளேன். அவர்களும்உணர்ந்துள்ளனர் சிலர் மேலைத்தேய வாழ்க்கை முறையுடன் ஒன்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் இங்குவருவதை விரும்பாதவர்களாகவேயுள்ளனர்

இங்குவர விரும்புவதாக கூறி இங்குள்ள நிலைமை பற்றி கேட்டவர்களுக்கு நான தற்போது இங்குள்ள புதிய தலைமைத்துவத்தை ஏற்று அதற்குக் கட்டுப்பட்டு வாழும் மன நிலையிருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளேன்.

**கேள்வி;** மேலை நாடுகளில் வாழும் தமிழ் பெண்களை அங்குள்ள எமது இளைஞர்கள் விரும்பாததன் காரணம் என்ன?

**பதில்:** நீண்டகாலம் அங்கு வாழும்தமிழ் பெண்கள் மேலைத்தேய நாடுகளின் கலாசாரங்களுடன் ஒன்றி அந்த நாட்டு சட்டங்களை தமக்கு சாதகமாக்கிக் கொள்கின்றனர். இதனால் பெருமளவு பெண்கள் விவாகரத்து செய்து வருகின்றனர். இதை நோக்காகக் கொண்டு இங்கிருந்து மணமகளை தேர்ந்தெடுத்தால் தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளலாம் என அவர்கள் நினைக்கின்றார்கள்போல்தெரிகிறது.

**கேள்வி:** மேற்குலகில் வாழும் தமிழர்களுக்கு இறுதியாக என்ன கூறி வந்தீர்கள்?

**பதில்:** எங்கள் நாட்டிலிருந்து மேற்குலகநாடுகளுக்குவந்துள்ள நீங்கள் மேலைத்தேயநாடுகளின் பண்பாட்டுடன் கீழைத்தேய நாட்டுப் பண்பாடுகளை இணைத்து அதில் தியனவற்றை எமது கலாசாரங்களுக்கு ஒவ்வாதனவற்றைக் களைந்து நல்லனவற்றைப் புகுத்திக் கொள்ளுங்கள் மேலைத்தேய நாடுகளின் எல்லாக் காரியங்களையும் அரவணைக்காதீர்கள். நீங்கள் வெளிநாடு வரும்போது தாண்டிக்குளம் முதல் இதுவரை பொய்யான தகவல்களை கூறி எமதுபோராட்டங்களை கொச்சைபபடுத்தியே வந்து சீவியம் நடந்துகிறீர்கள் இதற்குப் பிராயச்சித்தமாக எமது உண்மையான போராட்ட நோக்கைஇனியாவது தெளிவுபடுத்தி உங்களால் ஏற்படுத்தப்பட்ட களங்கத்தை துடைக்க முனையவேண்டும் அத்துடன் எமது போராட்டத்திற்கு உங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும் என்றேன்.

**கேள்வி;** எமது மண்ணிலிருந்து கொண்டு மேற்குலகநாடுகளிற்கு செல்லத்துடிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்;** 'இக்கரைக்கு அக்கரைப் பச்சை' அங்கு வாழும் தமிழர் அனைத்து சுகங்களையும் இழந்து வாழ்கின்றனர் நாம் இங்கு அடிமை வாழ்விலிருந்து விடுபட்டு சுதந்திர புருஷர்களாக வாழத்துடிக்கும்வேளை எம்மவர்கள் அங்கு சென்று பழைய காலனித்துவ ஆட்சியில்கொத்தடிமைகளபோன்றுவெள்ளையனுக்கு அடிமைச் சேவகம் செய்து வாழ்கின்றனர். அதிலும் எதிர்பார்த்த இலக்கை அடைந்தவர்கள் மிக சிலரே. வசதியிருப்பின் மேலைநாடுகளுக்கு சுற்றுப்பயணம செய்யலாம் அது வரவேற்கப்படக் கூடியது. ஆனால் அங்கேயே தங்கி வாழ விரும்புவது மடமைத்தனம் என்றார்.

சந்திப்பு; சசிகரன்

## 4-ம் ஆண்டுநினைவலைகள்



பிறப்பு
30. 9. 1971

வீரச்சாவு
22. 11. 1990

### வீரவேங்கை ரசிக்கா
### (யாழினி சத்தியநாதன்)

மண் மீட்கப் புறப்பட்ட மாவீர மணியே
மாங்குளந் தனிலே எதிரியை அழித்தாய்
கண்போல் ஈழத் தாயகம் காத்திட
களத்திவில் ரசிக்கா காவிய மாகினாள்
தொல்லைகள் புரிந்த சிங்களப் படைகளை
தொண்ணூறு தனிலே முகாமுடன் தகர்த்தாள்
எல்லையை காத்திட எழுந்தாய் ரசிக்காவே
என்றும் எங்கள் நினைவில் நிற்பாய்.

9/6 மகேந்திரன் வீதி,
அரியாலை.

- குடும்பத்தினர்
(10197)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### செபஸ்தியாம்பிள்ளை அன்ரனி

சேம்பர் லேன்

பிறப்பு 11. 1. 1939 அழிப்பு 26-11.1989


அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ் புனித அடைக்கலமாதா ஆலயத்தில் (26 - 11 - 94) திருப் பலிப் பூசை 'ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரையும் திருப்பலியில் பங்கு பற்றி அவரிற்காக மன்றாடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் -
M. அன்ரன்தாஸ்
(மருமகன்) (10195)

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 6-ம்மாத நினைவு அஞ்சலி

எங்கள் தலைவா! அப்பா



அமரர்

### சினியர் சுந்தரலிங்கம் (கடவுள்)

(சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

அன்னை மடியில்
28. 8. 1944

ஆண்டவன் அடியில்
15. 06. 1994

ஆறுமாதம் போனதப்பா உமைப்பிரிந்தே! நாம்
உலகத்தில் நடைப்பிணமாய் ஆனோம் அப்பா
சீராக சிறப்பாக எமை வளர்த்தீர் அந்தோ!
செயல் வீரராய் திகழ்ந்தீர் - வாழ்வில் மேலாம்
ஆராமை மிக்கரிய நிழலை ஈந்தீர் - தலைவா
அன்புருவாய் அனைவருக்கும் ஆறுதலைஈந்தீர் அப்பா
கார் பொழியும் மழை போலக் கண்ணீர் விட்டு
கலங்கியழ வைத்தெம்மை பிரிந்ததேனோ -பேரானா
உமை எங்கள் உள்ளத்தென்றும் பெருந்தெய்வமாகப்
போற்றி வருவோம் நாமே.

சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

என்றும் உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மற்றும் மைத்துனர்கள்
(10194)

## நேப்பாள

க்ழர் உடன்பாடு மூலம் இந்தியாவுக்கு தாரை வார்த்தார். அது போலவே முன்னைய இந்தியப் பிரதமர் சந்திரசேகரின் உறவினரொருவருக்கு வணிகச் சலுகைகள் வழங்கியதாக - டெல்லிப்பகுதி பெலிசார் நேப்பாளத்தின் முன் அனுமதியின்றி நேப்பாளப் பகுதிக்குள் நுழைந்து தேடுதல் வேட்டை நடத்துவதாக - நேப்பாளத்தில் குடியேறிய இந்தியத் தொழிலாளர்க்கு சாதகமான முறையில் சட்டங்கள் இயற்றியதாக - பல இந்தியரை நேப்பாளக் குடிமக்களாக்கும் வகையில் பிரசாவுரிமை சட்டங்களை மாற்றியதாக - கொய்ராலா மீது கடும் கண்டனம் கம்யூனிஸ்ட் கட்சியால் தெரிவிக்கப்பட்டன. இங்குள்ள வித்தை என்னவென்றால் இத்தகைய பல நடவடிக்கைகளை நேப்பாளத்தின் உயர் நீதிமன்றே சட்டவிரோதம் எனக்கூறிவிட்டமை தான். நேப்பாளத்தின் இயற்கை வளங்களை அன்னிய நாட்டிற்கு அளிப்பதாயின் நாடாளுமன்றின் ⅔ பெரும்பான்மை ஆதரவு வேண்டும் என உயர் நீதிமன்று தீர்ப்பளித்து விட்டது.

இவையெல்லாவற்றையும் விட இந்திய எதிர்ப்பு வாதத்தினை நேப்பாளத்திலே கொழுந்து விட்டெரியச் செய்த சம்பவமாக CPN (UML) கட்சியின் செல்வாக்கு மிக்க செயலாளரும் தானக்பூர் உடன்பாட்டை மிகக்கடுமையாக எதிர்த்தவருமான மதன் பண்டாரி மிக்க சந்தேகமான முறையில் ஜீப்விபத்தொன்றில்சென்ற வருடம் மே மாதம் 16ம்திகதி மாண்டுபோனார் இது தற்செயல்விபத்து என அரசு கூறிய போதும் பண்டாரியின் கொலை ஒருஉள்ளூர் சர்வதேச கூட்டுச் சதியெனக் கூறி டலத்தஆர்ப்பாட்டங்களை பொதுவுடமைக் கட்சிகள் நேப்பாளத்தில் தொடங்கின றோவின் தலையீடு இதில் உள்ளது என்றும் றோவே இவ்விபத்தை திட்டமிட்டது என்றும் நேப்பாளத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. எனவே இந்தியதாசரான கொய்ராலாவை பதவி இறக்காமல்ஓயோம்என நேப்பாள பொதுவுடமைக் கட்சிகள் தொடங்கிய இயக்கத்

இற்கு நேப்பாளக் காங்கிரஸ் கட்சியின் உயர் தலைவரான கணேஷ் மான்சிங்கிற்கும்தலைவரான பட்டாராயும் ஆதரவளித்தனர் இவ்வாறாக கொய்ராலா பதவியிழந்தார்இந்திய முகவராகவிருந்த அவர் எதிர்காலம்கேள்விக் குறியாகி விட்டது

தொடக்கத்தில் 1949-ம் ஆண்டு கல்கத்தாவில் முளைவிட்ட நேப்பாளக்கம்யூனிஸ்ட் கட்சி-நேப்பாள மாக்சிய கம்யூனிஸ்ட் கட்சி CPN (M) எனப்பட்டது. எனினும் பின்னர் சருவதேச பொதுவுடமை நிலைப்பாடுகட்கு ஏற்ப பலவாக இக்கட்சி சிதறியது. எனினும் 1990-ம் ஆண்டு காத்மண்டுக்கு வருகை தந்த மேற்குவங்க முதல்வர் ஜோதி பாசுவின் முயற்சியால் இருபிரதான பொதுவுடமை கட்சிகள் இணைந்தே CPN (UML) என உருவாக்கினர். இதன் தலைவரான மன் மோகன் அதிகாரியே அடுத்த பிரதமராகலாம் எனக் கருதப்படுகின்றது. எனினும் சில தொகுதிக்கான தேர்தல் முடிவுகள் இன்னமும் வராத நிலையில் எவரும் உறுதியான பெரும்பான்மை பெறாத நிலையில் நேப்பாள அரசியலின் எதிர்காலம் என்னவாகவிருந்தாலும் -இந்தியமேலாண்மைக்கு பலத்த அடியினை நேப்பாள மக்கள் கொடுத்ததின் மூலம் தமது தேசிய கௌரவத்தை உலகத்தின் முன்னே உயர்த்தி விட்டனர் என்பதே நாம் மனம் கொள்ள வேண்டிய செய்தி.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருவாட்டி தங்கம்மா தியாகராசா
குருப்பசிட்டி

மலர்வு:10-12-1917 மறைவு:26.10.1994

ஆனை அரசாண்ட
அத்தாணி மண்டபத்தில்
பூனை போல் நிண்டு
புலம்பி அழுகிறமே
கொம்பன் அரசாண்ட
குளத்து மேட்டினிலே
வெம்பி நிக்கிறமே
வேதனையால் வாடிறமே.

'செல்வ பவனம்'
சுவாமி ஞானப்
பிரகாசர் வீதி, உடுவில்.
(10196)

திருமதி மு.சந்திரமணிதேவி (மகள்)
செல்வி மு.நிரஞ்சனா
(பேர்த்தி)
செல்வன் மு.விஜயராகவன்
(பேரன்)

## நீங்காத நினைவுகளுடன்
## 2-ம் ஆண்டு



தாய் மடிக்காக
16-02-1971

தமிழீழ மண்ணிற்காக
25-11-1992

### லெப். மதி
பாலசிங்கம் சத்தியசிலன்

மாவீரத் தாரகையே
வானத்து முழு மதியே
ஈராண்டு சென்றிடினும்
ஒலிக்குதடா உன் குரல் இங்கே

நவக்கிரி
புத்தூர்.
(10169)

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## பிரதி

தலி ஆகியோரும் வரிசையாக இருக்கின்றனர்-

தொண்டமான் எதிர்பார்த்த இரண்டு பிரதியமைச்சர் பதவிகள் இலங்கை தொழிலாளர் காங்கிரசிற்கு வழங்கப்படவில்லை.

சந்தர்ப்பத்திற்கேற்ப மாறுபடும் தொண்டமானுக்கு கபினட் பொறுப்பு வழங்கப்படும் போது, நிபந்தனையின்றி உங்களை ஆதரித்த எனக்கு ஏன் கபினட் பொறுப்பு வழங்கப்படக் கூடாது எனக் கேள்வியெழுப்பிய சந்திரசேகரனுக்கு தோட்டத்துறை-வீடமைப்பு என்ற பிரதியமைச்சு பொறுப்பு வழங்கப்பட்டுசமாளிக்கப்பட்டுள்ளார்-

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) க்கு பிரதியமைச்சு பொறுப்பொன்றை மேலதிகமாக எதிர்பார்த்த சிறிமாணிபிடமிருந்து நெடுஞ்சாலைகள் கபினட் பொறுப்பு பறிக்கப்பட்டுள்ளது

இவ்வாறான நிலையில், புதிய அமைச்சரவை தொடர்ந்து இவ்வாறு இயங்குமா? அல்லது மாற்றப்படுமா? என்ற கேள்விகள் எழுப்பப் பட்டுள்ளன. இவற்றிற்கு எதுவும் நிரந்தரமல்ல'' என பதிலளித்துள்ள சந்திரிகா மீண்டும் ஓர் அமைச்சரவை மாற்றத்தை விரைவில் அறிவிக்க கூடுமென அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அப்படியான சந்தர்ப்பத்தில் யாருடைய தலைகள் உருளப் போகின்றன? அதனால் அரசாங்கத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படுமா? அவற்றையெல்லாம் சந்திரிகா சமாளிப்பாரா? என்ற கேள்விகளுக்கு காலம்தான் பதில் கூற வேண்டும்.

## மீண்டும் வருவாராம்

[கொழும்பு]

சமாதான நடவடிக்கைகள் வலுப்பெறும் போது, வடக்கில் செய்யவேண்டிய புனரமைப்பு வேலைகளைப் பற்றி ஆராய்வதற்காக தான் மீண்டும் கொழும்புக்கு வர இருப்பதாக, பிரிட்டிஷ் வெளியுறவு மற்றும் பொதுநலவரசு விவகார துணை அமைச்சர் டோனி பால்டி தெரிவித்துள்ளார்.

அண்மையில், சிறிலங்காவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட அவர், வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரையும் சந்தித்திருந்தார்.


புதிய நிர்வாகத்தின்கீழ்
கட்டணக் குறைப்புடன்
புதிய அனுமதிகள்

பெற்றோர் மாணவர் கவனத்துக்கு

வடமராட்சியில் இருநகர் பிரதேசங்களில்
மாணவர் கல்வி நலன் காக்கும் சேவை;

கல்வி ஆண்டு 1995

புதிய கட்டண விபரங்கள்

ஆண்டு -> 9 - 11 - வரை = 65 ரூபா மட்டும்
ஆண்டு -> 5 - 8 - வரை = 55 ரூபா மட்டும்

மாணவர்கள் பெற்றோருடன் வந்து அனுமதி பெறுவது நன்று
01-12-1994 க்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

யங்றோயல்ஸ்
கல்வி நிறுவனம்
நெல்லியடி-காவெட்டி

N. C. A
கல்வி நிறுவனம்
தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை

(சி 10170)


08.11.94 அன்று வெற்றிலைக்கேணியில்
வீரசாதனை படைத்த கடற்கரும்புலி

## மேஜர் வித்தியின்
## 18-ம் நாள் நினைவு அஞ்சலி



தேசத்திற்காக தேகம் தனைத் தந்து
தியாகம் புரிந்தவனை
கடலின் நடுவில் கனலாய் எரிந்து
சபதம் முடித்தவனை
கடலின் அரக்கர் கப்பல் தகர்த்து
எம் வாழ்வைக் காத்தவனை
நெஞ்சம் மறந்திடுமோ - வித்தி
நினைவொழிந்து போய் விடுமோ.

வேலணைத்துறையூர்
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,
தீவகம்.

(10171)

# மாவீரர் வாரம் நவ. 21-27. 1994

# யாழ். குடாநாட்டின் எழுச்சிக்கோலம்.

மாவீரர் வாரம் யாழ். குடாநாடெங்கும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விலைமதிக்க முடியாத தம் இன்னுயிரை தியாகம் செய்த ஆயிரக்கணக்கான போராளிகளின் நினைவாக அஞ்சலி செலுத்தப்படும் இந்த வாரத்தில் மாணவர்கள்- அரச, தனியார் ஊழியர்கள், குழந்தைகள், பெரியவர்கள் என மக்கள் வெள்ளம் புதிய எழுச்சி உணர்வலைக்குள் சிக்குண்டு காணப்படுகின்றனர்.

## நினைவுப் பந்தல்கள்

யாழ். மாவட்டத்தில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என்ற மூன்று பகுதிகளிலும் மாவீரர் வாரம் பிரமாண்டமாக அனுஷ்டிக்கப் படுகிறது.

ஒவ்வொரு கோட்டங்களிலும் வட்ட ரீதியாக பல நினைவுப் பந்தல்களும், வீதி வளைவுகளும், நினைவாலயங்களும் மாவீரரின் தியாகத்தை தெரிவிக்கும் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் வரலாற்றில் இந்த வாரம் மிக மகத்துவமானதும் புனிதத் தன்மையை புலப்படுத்தக் கூடியதுமானதுமாகும்.

எழுச்சிக் கோலம் பூண்டுள்ள இந்த மண்ணில் மாவீரர்களின் தியாகத்தை, சாதனையை, வெற்றியை வெளிப்படுத்தும் வடிவமைப்பிலான வீதி வளைவுகள் நூற்றுக்கணக்கில் அமைக்கப்பட்டுள்ளன.

கண்ணைக் கவரும் விதத்தில் வீதி வளைவுகளுடன் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கேந்திர இடங்கள்- அரச, தனியார் காரியாலயங்கள் - பாடசாலைகள்-போராளிகளின் காரியாலயங்கள் -ஆகியவற்றில் பிரமிக்கத் தக்க விதத்தில் இவை அமைக்கப்பட்டுள்ளன. சிவப்பு- மஞ்சள் கொடிகள் காற்றின் வேகத்திற்கு ஏற்ப அசைகின்றன.

மாவீரர்கள் பலரின் உருவப் படங்கள் நினைவுப் பந்தல்களில் வைக்கப்பட்டுள்ளன.

## நினைவாலயங்கள்

மூன்று கோட்டங்களிலும் வட்டரீதியாக அமைக்கப்பட்டுள்ள நினைவாலயங்கள் அஞ்சலி செலுத்தச் செல்லும் மக்களை பரவசமடைய வைக்கின்றன.

அந்தந்த வட்டங்களை சேர்ந்த மாவீரர்களின் உருவப்படங்கள் அலங்கரிக்கப்பட்ட அந்த நினைவாலயங்களில் வைக்கப்பட்டுள்ளன.

அந்நிய ஆதிக்கத்திடம்
தமிழன் இழந்து... இழந்து-
இழப்பதற்கு எதுவுமற்ற போது
எழுச்சியடைந்தான்-
தேசியத் தலைவரின் வழியில்
அணி திரண்டான்.
இன்று
உயிரை அர்ப்பணித்து
விடுதலையின் விளிம்பு வரை
சென்றுவிட்டோம்.
உலகம் புல்லரிக்கப் புல்லரிக்க
எம்மைப் பார்த்துப்
புன்னகைக்கிறது! வியக்கிறது!

ஒவ்வொரு உருவப்படங்களின் அடியில் தீபங்கள் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன. நிரையாக பூச்சாடிகள் வைக்கப்பட்டுள்ள இந்த நினைவாலயங்களின் பக்கப் பகுதிகளில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சாதனைகளை விளக்கும் சுலோகங்களும் எழுதப்பட்டுள்ளன. மாவீரர்களின் தியாகத்தின் செறிவை வெளிப்படுத்தும் வாசகங்களும் காணப்படுகின்றன.

யாழ். பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள மாவீரர் நினைவாலயம் நிரந்தர நினைவாலயமாக அமைக்கப்பட்டுள்ளது. மிக அழகான வடிவமைப்புடன் இது உள்ளது.

இந்த நினைவாலயங்களுக்கருகாமையை ஒட்டி பல யார் தூரத்திற்கு வர்ண மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இவை இரவுப் பொழுதுகளில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு உதவியாக வெளிச்சம்பாய்ச்சியபடி நீண்டநேரம்ஒளிர்கின்றன.

இதன் காரணமாக நினைவாலயப்பகுதி ஒளி வெள்ளமாக காணப்படுகின்றது. இப்பகுதியில் மாவீரர்களின் உணர்வுகளை புரியவைக்கும் புரட்சிப் பாடல்கள் - இசைகள் ஒலிபரப்பப்படுகின்றன. இவை மக்களை புதியதொரு மனோ நிலைக்கு இட்டுச் செல்கிறது.

அற்புதமான விடுதலைப் போராட்டத்தில் அளப்பரிய அர்ப்பணிப்பை நிகழ்த்திய மாவீரர்கள் தியாகத்திற்குரியவர்கள் என்ற அபிப்பிராயம் மக்கள் அனைவரின் மனங்களிலும் முளை விடுவதை அவதானிக்க முடிகிறது.

சிறுவர்கள் - சிறுமிகள் - பெரியோர்கள் என சகலரும்,நேற்று தம் முடன் உலாவந்த போராளிகள் களத்தில் வீர காவியம் படைத்து மாவீரர்களானார்கள் என்ற எண்ண அலைகளுக்குள் மிதக்கும் வகையில் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

பார்க்கும் இடமெங்கும் - பாடசாலைகள்- அரச- தனியார் காரியாலயங்கள்- போராளிகளின் முகாம்கள் - அலுவலகங்கள் யாவிலும் மாவீரர் தங்கள் தியாகத்தையும் தேசத்தின் விடுதலையை வெளிப்படுத்துமாப் போன்று வரிகள், கவிதைகள், வரையப்பட்ட ஓவியங்கள் கலையம்சமாக வெளிப்பட்டு நிற்கின்றன.

## நாற்சந்தியில் ஒளிரும் சுன்னாகம் நினைவாலயம்

மாவீரர் நினைவாலயங்களில் உடுவில்-தெல்லிப்பளை வட்டத்தின் சார்பாக சுன்னாகம் சந்தியில் ஒரு பிரமாண்டமான நினைவாலயம் அலங்கார வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்டுள்ளது

இந்த நினைவாலயத்தின் வெளி முகப்பு தோற்றத்தின் உச்சி வளைவில் தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் கரும்புலி, வரிப்புலி, கடற்புலி, காவற்துறை படையணிகளுக்குதலைமை தாங்கி வழி நடத்துமாப் போன்ற படம் அமைக்கப்பட்டுள்ளது.

வெளிமுகப்பின் ஒரு பகுதியில் வரிப்புலி ஒன்றும், மறு பகுதியில் கரும்புலி ஒன்றும் பாயத் தயாராக இருப்பது போன்ற தோற்றத்திலான உருவப் படங்கள் அமைக்கப்பட்டுள்ளன

வெளித் தரையில் குறிப்பிட்ட சில பரப்பு இடமெங்கும் மணல் பரப்பப்பட்டுள்ளது இங்கு கயிறு கட்டப்பட்டு, காவல்துறை உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தத் திரளும் மக்களை ஒழுங்கு படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நினைவாலயத்தின் உள்ளே தரைப் பகுதியின் மத்திய பகுதி செங்கம்பள விரிப்புடன் புனிதப் படுத்தப்பட்ட பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவீரர் உருவப்படங்களின் அடியில் வர்ண மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன. உருவப்படங்கள் யாவற்றிற்கும் வாசமாலைகள் அணிவிக்கப்பட்டுள்ளன.

கப்டன் அங்கயற்கண்ணியின் கட்டளைக் கப்பல் தகர்ப்பை விளக்கும் கப்பல் மாதிரியான வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

210 அடி நீளமான இந்த நினைவாலயம் செம்மையாக அலங்கரிக்கப்பட்டு மனதை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. மாவீரர்களின் வீரமும் தியாகமும் இந்த ஆலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை உணரமுடிகின்றது.

அந்நிய தேசத்தவன் பார்த்தால்- இந்த மண்ணின் ஜீவத்துடிப்பும் அதன் யதார்த்தமும் துலங்கும் வகையிலும் மாவீரர் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

## தியாகத்தைச் செப்பும் வரிகள்...

★ மண்ணிலா எங்கள் வீரரைப் புதைத்தோம்; அல்ல- மனங்களில் அல்லவா விதைத்தோம்.

★ மாவீரர்கள் புதைக்கப்பட்ட இடங்கள் புல்முளைக்கும் இடங்கள் அல்ல;புதிய போராளிகளைபிரசவிக்கும்கர்ப்பப்பைகள்

★ இதயத்தில் இனத்தின் விடுதலை. கரத்தில் ஒரு தேசத்தின் வரலாறு. சுதந்திர வாசல்வரை இவன் சுவடுகள் ஓயாது.

★ மாவீரர்களே உங்களைப் புதைத்த மண் உறங்காது. உரிமை பெறும் வரைகலங்காது. எங்களது தாயகம் விடிவு பெறும். புலிக்கொடியுடன் ஆட்சி பெறும்.

-என்ற வரிகளில் அமைந்த சுலோகங்கள் குடாநாட்டின் பல வளைவுகளிலும், பந்தல்களிலும் வரையப்பட்டுள்ளன.

மாவீரர் வாரத்தில் பல்வேறு பகுதிகளிலும் வித்தியாசமான அமைப்புகளினூடாக வரலாற்று செய்திகள் சொல்லும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

## புகையிரதக் கண்காட்சி

குறிப்பாக கோண்டாவிலில் அமைக்கப்பட்டுள்ள புகையிரத பிரயாண கண்காட்சியும் குருநகர் சென்.ரொக்ஸ் விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள கப்டன் அங்கயற்கண்ணி தகர்த்த கட்டளை கப்பல் வடிவில் அமைந்த மாதிரி வடிவ நினைவாலயமும் புதிய வடிவில் எமது தேசத்தின் வரலாற்றுப் பதிவுகளாக அமைக்கப்பட்டுள்ளன.

புகையிரத பிரயாண கண்காட்சியில்-

புகையிரதம் பயணமாகின்றது; அங்கு ஆறு புகையிரத நிலையங்கள் உள்ளன.

புகையிரதத்தின் இயந்திரம் தலைவர் பிரபாகரன். அவர் வழிநடத்திச் செல்லும் போராட்ட பயணம் ஆறு நிலையங்களில் தரிக்க வேண்டி உள்ளது. எங்கு புகையிரதம் தரித்தாலும் இறுதியில் தமிழீழம் என்னும் நிலையத்தையே புகையிரதம் போய்ச் சேரும்.

தமிழீழ தேசியத் தலைவரின் நேர்த்தியான வழிகாட்டலில் போராட்டம் உறுதியாக- தடுமாறாமல் செல்லும் குறியீட்டு உத்தியாகவே இந்த புகையிரத கண்காட்சியை ஆறு புகையிரத தரிப்பு நிலையங்களில் முதலாவது நிலையத்திற்கு ''ஏன் இந்தப் போராட்டம்?'' என்றும் இரண்டாவது நிலையத்திற்கு 'தமிழீழ தாகம்' என்றும் மூன்றாவது நிலையத்திற்கு 'இந்திய - ஈழப்போர்' என்றும் நான்காவது தரிப்பிடத்திற்கு '2 ஆவது ஈழப் போர்' என்றும் ஐந்தாவது தரிப்பிடத்திற்கு 'போரும் சமாதானமும்' என்றும் ஆறாவது நிலையத்திற்கு 'மலரும் தமிழீழம்' என்றும் பெயரிடப்பட்டுள்ளன.

முதலாவது தரிப்பிடம் 1956ஆம் ஆண்டில் தமிழர் மீதான சிங்கள காடையர்களின் கொடுமையை கட்டியும் 58ஆம் ஆண்டு இனக்கலவர கொடுமை சித்தரிக்கப்பட்டும் உள்ளன.

இரண்டாவது தரிப்பிடம் -தமிழீழ தாகம் என்ற பெயருடன்- ஈரநதடி போரின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் இது சித்தரிக்கின்றது முதல் மாவீரன் சங்கரின் உருவப்படத்திற்கு அடியிலிருந்து பூகம்பம் எழும் காட்சி விவரிக்கப்பட்டுள்ளது.

துரோகிகளை ஒழித்தல், பொலிஸ் உளவுப் படையை அழித்தல், மாவட்ட சபைத் தேர்தல் பகிஷ்கரிப்பு, அவ்ரோ விமானக் குண்டுவெடிப்பு மற்றும் எதிரியின் இன அழிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.

மூன்றாவது புகையிரத நிலையம் 'இந்திய - ஈழப்போர்' என்ற பெயரிடப்பட்டுள்ளது. இந்திய இராணுவத்தின் தமிழீழம் மீதான ஆக்கிரமிப்பும் அழிவும், விடுதலைப் புலிகளின் மனோ பலமும் இதில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

நான்காவது தரிப்பிடம் இரண்டாவது ஈழப் போரை வெளிப்படுத்தி நிற்கின்றது. இராணுவத்தின் முகாம்கள், இராணுவ ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டமையும ஆனையிறவில் இடம்பெற்ற மரபு வழிப் போர் ஆகியவற்றுடன் பல நிகழ்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன,


ஐந்தாவது நிலையத்தில் தமிழர்கள் சிங்கள ஆட்சியாளர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளும், பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுள்ளன.

ஆறாவது தரிப்பிடம் 'மலரும் தமிழீழத்தில்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. போராட்ட பயணம் இறுதியாகச் செல்லும் இலக்கு இதில் வெளிப்படுத்தப்படுகின்றது. அமையப் போகும் தமிழீழத்தின் பொருளாதார - கட்டுமான தரவுகள் நிர்வாகப் பிரிவுகள் எனப் பல விடயங்கள் இதில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் யாழ் மாவட்ட வெதுப்பக சங்கமும் இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன. குழந்தைகள்- மாணவர்கள்- பெரியவர்கள் என பலரும் ஆர்வத்துடன் திரண்டு வந்து இந்த கண்காட்சியில் ரயில் பயணத்தின் ஊடாகஆர்ப்பணிப்புகள் பல நிகழ்ந்த - வீரகாவியம் பல வரையப்பட்ட எமது தேச விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியை கண்டுகொள்கின்றனர்.

## கப்பல் வடிவிலான நினைவாலயம்

அடுத்ததாகவலிகாமம் கிழக்கு கடற்புலிகளினால்ஒழுங்கு செய்யப்பட்ட கப்பல் வடிவிலான நினைவாலயம் குருநகரில் அமைக்கப்பட்டுள்ளது.



கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் செல்லும் வீதியில் வீதிக்குக்குறுக்கே அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவு

மிக அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளஇந்தகட்டளைக்கப்பல் நினைவுப்பந்தலின் நடுப்பகுதி கப்டன் அங்கயற்கண்ணியின் கரும்புலித் தாக்குதலில் வெடித்துப் பிளப்பது போன்ற வடிவமைப்பில் செய்யப்பட்டுள்ளது

57 அடி நீளமும் 16 அடி அகலமும் கொண்டு இதன் முற்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. பின் பகுதியில் மாவீரர்களின் உருவப்படங்களை தாங்கி 80 அடி நீள நினைவுப் பந்தல் இணைக்கப்பட்டுள்ளது 150 க்குமேற்பட்ட உருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி மேற்கொள்ளப்படுகின்றது.

கப்பலின் நடுப்பகுதியிலேயே வாசல் உண்டு. இதனுள் நுழையும் மக்கள் அஞ்சலி செலுத்துவதில் ஈடுபடுகின்றனர். கப்பலின் உச்சிப் பகுதியை பார்வையிட வசதியாக ஏணி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. வர்ண வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த பந்தல் இரவு வேளைகளில் மின்ஒளியில் மிதக்கின்றது.

மாவீரர்களின் போராட்ட சிந்தனையை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகள் பல இடங்களிலும் நடைபெறுகின்றன.

## கலை அரங்கு

வட்ட ரீதியாக கலை, பண்பாட்டு கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுகளில் வீதி நாடகங்கள், கரகாட்டம், காவடி ஆட்டம் போன்றன நடாத்தப்படுகின்றன.

பொது மக்கள் கூட்டமாக திரண்டு வந்து இவற்றை கண்டு எழுச்சியுணர்வு சுமந்து செல்கின்றனர்.

## தவளை உருவப்படம்

இதேவேளையில் - பூநகரி இராணுவ முகாம் தகர்க்கப்பட்ட வீரச் சாதனையை வெளிப்படுத்துமாப் போன்று சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுப் பந்தலின் முன் பகுதியில் - தவளை வடிவிலான உருவப் படம் அமைக்கப்பட்டுள்ளது. ஏராளமான பொது மக்கள் இதனை பார்க்கத் திரள்கின்றனர்.

தியாகி திலீபனையும் அவன் தியாகத்தை நினைவுகூரும் விதத்தில் மாவீரர் வாரத்தில் வடமராட்சி சிற்றூர்தி சேவையினர் குடிதண்ணீர் தாங்கி ஒன்றை அமைத்துள்ளனர்.

மாவீரர்கள் ...
இந்த மண்ணின் விடிவிற்காக
எழுந்தவர்கள்... மடிந்தவர்கள்...
ஓர் உன்னத பயணம் புறப்பட்டவர்கள்.
இவர்களுக்கான அஞ்சலிகள்
இந்த மண்ணை மகிமைப்படுத்தும்
இவர்களின் ஞாபகங்கள்
இத் தேசத்தின் சிந்தனைகளைப்
புனிதப்படுத்தும்!

## சிவப்பு மஞ்சள் கொடிகள்

வடமராட்சியில் கடற்புலி மாவீரர்களை நினைவு கொள்ளும் விதமாக சிவப்பு-மஞ்சள் கொடிகளுடன் நீலம்-வெள்ளை கொடிகளும் கட்டப்பட்டுள்ளன. இவை காற்றின் வேகத்திற்கேற்ப மெல்லிய சப்தத்துடன் அசைகின்றன.

பாடசாலைகளில் கல்வி கற்று மாவீரர்களானவர்களின் உருவப்படங்கள் அந்தந்த பாடசாலைகளில் வைக்கப்பட்டு மாணவர்களினாலும் ஆசிரியர்களினாலும் நினைவு கொள்ளப்பட்டு அஞ்சலிசெலுத்தப்படுகின்றது. பாடசாலைகளில் மாவீரர் கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன.

## மாவீரர் துயிலும் இல்லம் பொலிவு

மாவீரர் துயிலும் இல்லங்கள் புதுப் பொலிவு பெற்றுத் திகழ்கின்றன.கோப்பாய் துயிலும் இல்லத்திலும் அருகாமையில் உள்ள இராச பாதையிலும் ஏராளமான மின் குமிழ்கள் பொருத்தப்பட்டு இரவுகள் பகல்களாக மாற்றியமைக்கப் பட்டுள்ளன.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல வாசலில் தமிழீழ தேசத்தின் மாதிரி உருவ அமைப்பு பிரமாண்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த உருவ அமைப்பை சுற்றி மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியிலிருந்து யாழ். மாநகர எல்லைவரை சுமார் மூன்று மைல் தூரம் வர்ண மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இப்பகுதியில் எல்லா நேரமும் மாவீரர் எழுச்சி கீதங்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

மண்ணின் விடிவிற்காக மாவீரரானவர்களின் புனிதமும் தூய்மையும் அஞ்சலி நிகழ்வுகளில் பேணப்படுகின்றன.

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

யா/புங்குடுதீவு சித்தி விநாயகர் மகாவித்தியாலயத்திலும் யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்திலும் கல்வி கற்று இன்று மாவீரர்களாகி விட்டவர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் விழாவும், கலைநிகழ்வும் இன்று காலை 10 மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் அதிபர் திரு. நா. குருமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

## குருத்துவ கல்லூரியில் மாவீரர் நினைவு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை புனித சேவியர் குருத்துவக் கல்லூரியில் இன்று மாவீரர்களை நினைவுகூரும் வண்ணம் வைபவமொன்று நடைபெறவுள்ளது. இந்நினைவு கூரலில் சகல மதங்களைச் சேர்ந்தோரும் கலந்து கொள்ளவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளை யொட்டி விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினரின் 'சுவடுகள்', 'இசயநாதம்', 'எங்கள் தாய்த்திருநாடு' நூல்களின் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 11. 25
வெள்ளி இரவு

08.01 - மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி - ந. கிருஷ்ணா எழுதிய 'மாவீரர் புகழ் பாடுவோம்'.
08.25 - கணப்பொழுது
08.30 - செய்திகள்
08.40 - அரசியல் அரங்கம் - வே.பாலகுமாரன் எழுதிய 'வள்ளுவன் கூறிய உட்பகையும் சிங்களத்தின் எதிர்காலமும்'
08.50 - வாத்திய கானங்கள்
09.00 - மணிக்கு இரவுநிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1994. 11. 26
சனி காலை

07.02 - மாவீரவணக்கம்
07.15 - நீங்கள்கேட்டவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி - இ. இராஜேஸ்வரன் எழுதிய 'மாவீரர் இலட்சியங்கள் மாண்டு விடாது'
08.00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# எமது போராட்டத்தை புரிந்துகொள்ள சிங்களத் தலைமையால் முடியவில்லை

### - வே. பாலகுமாரன்

[யாழ்ப்பாணம்]

மாவீரர் நாட்கள் எங்களை நாங்களே புதுப்பிக்க வேண்டிய நாட்கள், அடுத்த நடவடிக்கையை எதிர்நோக்க வேண்டிய சக்தியைப் பெறுவதற்கான நாட்கள் ஆகும்.

இன்று தமிழனின் போர்த்திறன் போர் வல்லமை புதிய பரிமாணம் பெறுகின்றது. இந்த பெருமதிமிக்க போராட்டத்தை சிங்கள தலைமைத்துவத்தால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது.

புங்குடுதீவு நயினாதீவு ப.நோ.கூ. சங்க தலைவர் ப. கனகலிங்கம் தலைமையில் நேற்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தீவகக் கூட்டுறவாளர்களின் மாவீரர் தினவிழா இடம்பெற்றது. இதில் சிறப்புரையாற்றிய விடுதலைப் புலிகளின் உறுப்பினர் வே. பாலகுமாரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் எமது போராட்டம் நாளுக்கு நாள் மலைபோல உயர்ந்து செல்கிறது இந்த போராட்டத்தை நசுக்கவும் முடியாது இதை சமாளிக்கவும் முடியாது என்ன செய்வதென்று தெரியாமல் இன்று சிங்கள தலைமை திணறுகின்றது.

இந்த பிரச்சினையை தீர்க்கிறேன் என்று கூறி வருபவர்களெல்லாம் தீர்க்கமுடியாமல் சிதறிப்போகிறார்கள் அவர்களால் முடியாது இந்த பெருமதிமிக்க போராட்டத்தின் தன்மை அவர்களால் புரிந்து கொள்ளவும் முடியாது எங்களது பிரச்சினையை எங்களால்தான் தீர்க்க முடியும் மற்றவர்களால் அல்ல என்றார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரையாற்றும்போது தமிழனின் வரலாறு இன்று உலகத்தின் கூரையில் நின்று பேசப்படுகிறது இது இந்த மாவீரர் செய்த தியாகத்தினால் ஆகும் முன்பு இனவாதம் பேசியவர்களே சிங்கள அரசியலில் தலைவராக வர முடிந்தது இன்று சமாதானமாக இனப்பிரச்சினையை தீர்ப்போம் என்று கூறுபவர்களை தான் சிங்கள மக்கள் விரும்புகிறார்கள் இந்நிலைக்கு வரலாற்றை மாற்றியமைத்தது எமது போராட்டவலுவாகும் என்றார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் டொமினிக் போராட்டத்தை அர்த்தமுள்ளதாக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு எமது தலைவர் போராளிகளிற்கு பயத்தை அகற்றி துணிவையூட்டியுள்ளார் இந்தவழிகாட்டலில் இன்று உலகம் வியக்கும் அளவிற்கு எமது போராளிகளின் தியாகம் அமைந்துள்ளது என்றார். இவ்விழாவில் தீவக மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி நாமகள் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து பலர் மாண்புரை நிகழ்த்தினர். இதைத் தொடர்ந்து பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (இ)

## ஜனவரியில் வெட்டுப்புள்ளி

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளி ஜனவரி மாதம் நிர்ணயம் செய்யப்படும் எனவும் சித்தியடைந்த மாணவர்களுக்கு அனுமதி வழங்கும் நடவடிக்கை எதிர் வரும் பெப்ரவரி மாதம் முதல் மேற்கொள்ளப்படும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## சிறில் ரணதுங்கா தூதுவர் பதவி பறிப்பு

இலண்டனில் சிறிலங்கா தூதுவராக கடமையாற்றும் ஓய்வு பெற்ற ஜெனரல் சிறில் ரணதுங்கசிறிலங்காவுக்கு மீள அழைக்கப்பட்டுள்ளார்

அரசியல் காரணங்களை மையமாக வைத்து வழங்கப்பட்ட வெளிநாட்டுத் தூதர் பதவிகள், குறிப்பிட்ட நபர்களிடமிருந்து பறிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.




# அரசியல்வாதிகள், படை அதிகாரிகள் கொலைகளை ஆராய விசாரணைக்குழு

(கொழும்பு)

அரசியல் தலைவர்கள் மற்றும் படை அதிகாரிகளின் கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளது. இந்த ஆணைக்குழுக்களை அமைப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை ஜனாதிபதி திருமதிசந்திரிகாவுக்கு வழங்கியுள்ளது இத்தகவலை கொழும்பு கோட்டே பாராளுமன்ற கட்டிடத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தர்மசிறிசேன நாயக்கா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இந்தக் குழுக்கள் தற்போது சேவையிலுள்ள நீதிபதிகளைக் கொண்டதாக அமைக்கப்படும் எனவும், முன்னாள் அமைச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான லலித் அத்துலத் முதலி கொலை தொடர்பாக ஆராய்வதில் தனது பணிகளைத் தொடங்கும் எனவும், தொடர்ந்து விஜயகுமாரதுங்கா, ஜனாதிபதி பிரேமதாசா, மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரட்ண ஆகியோரின் கொலைகள் தொடர்பாகவும் ஆராயும் எனவும் தெரிவித்தார்.

இந்த விசாரணைக்குழு அமைக்கப்படுவதன் மூலம அரசின் வாக்குறுதி ஒன்று நிறைவேற்றப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

## விடுவிக்கப்பட்ட

லெனாட் - மரியம்மா (45) வயித்தி-மனுவேற்பிள்ளை (48 அந்தோனிப்பிள்ளை - யேசுராசா (50) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

விறகு வெட்டச் சென்றபோது மாட்டிக் கொண்டு விடுவிக்கப்பட்ட இவர்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் உறவினரிடம் ஒப்படைத்தனர். [யோ

## ராணுவ நடவடிக்கைகளுக்கு 34-கோடிரூபா நிதி ஒதுககீடு

(கொழும்பு)

அடுத்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்கான செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென வழங்கப்படவுள்ளவற்றின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இராணுவ நடவடிக்கைகளுக்கு 349 கோடி ரூபாவும், கடற்படை நடவடிக்கைகளுக்கு 54 கோடி ரூபாவும், விமானப்படை நடவடிக்கைகளுக்கு 64 கோடி ரூபாவும், சட்டத்தை அமுலாக்குதல், அரசாங்க பாதுகாப்பு பொலிஸ் திணைக்களம ஆகியவற்றுக்கு 173 கோடி ரூபாவும், தேசிய பாதுகாப்பு மற்றும் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு 37 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஆண்டு 3

திணைக்களமும் தேசியகல்வி நிறுவனமும இணைந்து எதிர் வரும் முதலாம் திகதி தொடக்கம் நான்காம் திகதி வரை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முகாமைத்துவப் பயிற்சி நிலையத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கான நான்குநாள் வதிவிடக் கருத்தரங்கொன்றை நடாத்த ஒழுங்கு செய்துள்ளதாகவும் இவ்வதிவிடக் கருத்தரங்கில் மூன்றாம் ஆண்டுக்கான புதிய பாடவிதானம் அறிமுகம் செய்து வைக்கப்பட உள்ளதுடன் அதற்கான கையேடுகளும் வழங்கப்பட உள்ளதாகவும் இதில் அவசியம் அவர்களைக் கலந்து கொள்ளுமாறு கோரும் அறிக்கையை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் சம்பந்தப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். (17)

## கரவெட்டிப் பகுதியில் அடையாளம் காணா சடலம்

(வடமராட்சி)

அடையாளம் காணப்படாத ஒருவரின் சடலம் கரவெட்டி சிராய்ப் பிள்ளையார் கோயில் கேணியில் இருந்து நேற்று பருத்தித்துறை காவல்துறையினரால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

இவர் நீல சேட்டும், பெனியனும் கோடு போட்ட வெள்ளைச் சாரமும், சிவத்த நிற உள்ளாடையும் அணிந்திருந்தார் 47 வயது மதிக்கக் கூடிய இந்நபர் தொண்டமானாறு என்று விலாசமிடப்பட்ட கடிதமும், அருகில் காணப்பட்டது.

இவரது துவிச்சக்கரவண்டியும், நஞ்சு திராவகம் பாவித்த போத்தலும் அருகில் காணப்பட்டன. (யோ)

## போர்க்கப்பல்களைப்

இதற்காக விமானப்படைக்கு மேலும் ஆறு அன்டனோவ் 32 பிரக உலங்கு வானூர்திகளை கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை சிறிலங்கா கோரியுள்ளது

இக்கேள்விகளுக்கான கேள்விப்பத்திரங்கள் டிசம்பர் எட்டாம் திகதிக்கு முன்பாக பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு கிடைக்க வேண்டுமெனவும் விரைவில் இவை கொள்வனவு செய்யப்படும் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்தியா உட்பட இருபத்து நான்குக்கு மேற்பட்ட நாடுகளில் படையினர் தமது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி வரும் எம். 1-8, எம் டி. வி 1, எம். ஐ. 171, மற்றும் எம். ஐ. ரக உலங்கு வானூர்திகளை கொள்வனவு செய்வதற்கே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு சர்வதேச அரங்கில் கேள்விப் பத்திரங்களை கோரியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அன்டனோவ்ரக உலங்கு வானூர்திகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக, ரஷ்ய நிறுவனமொன்றுடன் செய்யப்பட்டிருந்த 72 மில்லியன் ரூபா பெறுமதியான ஒப்பந்தம ரத்துச்செய்யப் பட்ட பின்னர் இப்போது கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு இருப்பது குறிப்பிடக்கூடியதாகும். ரத்துச் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் கீழ் மூன்று அன்டனோவ் ரக உலங்கு வானூர்திகளும். இரண்டு ரோந்துப் படகுகளும், 200 துருப்புக்களை காவும் வாகனங்களும் கொள்வனவுசெய்யப்பட இருந்தது.

அன்டனோவ் ரக உலங்கு வானூர்திகள் ஐம்பது படையினரை அவர்களது பொருட்களுடன் எடுத்துச் செல்லக் கூடியது என்பதும் எம். ஐ.17 ரக உலங்கு வானூர்திகள் முப்பது படையினரை எடுத்துச்செல்லவல்லது என்பதும் குறிப்பிடக்கூடியது'

கடற்படைக் கலங்களின் பாதுகாப்பு பணியில் விமானப் படையின் ஒத்துழைப்பை அதிகரிக்க இக்கொள்வனவு பயன்படும் என்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

# தற்கொலைப் படையாளி பெண்போன ஊர்ஜிதம்

### பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான காமினி திசாநாயக்கா கொல்லப்பட்ட முறையைப் பார்க்கும் போது இச்சம்பவத்துடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இருக்கிறது என்றே எண்ண வைக்கிறது.

இவ்வாறு பொலிஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் வெடிகுண்டைக் கட்டிக் கொண்டிருந்த பெண் ஒருவரே இக்கொலைக்கு காரணம் எனவும் இது கிடைக்கப்பெற்ற தடயங்களிலிருந்து உறுதிப்படுத்தப்படுகிறது எனவும், குறிப்பிட்டார்.

அவரது சிதறிய உடற்கூறுகளிலிருந்து குண்டு கட்டப்பட்டிருப்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன எனவும் எனினும் இப்பெண்ணின் ஆளடையாளம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்

சந்தர்ப்ப சூழ்நிலைகள் இப்பெண் விடுதலைப் புலிகளின் உறுப்பினராக இருக்கலாம் என்பதைக் கோடி காட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இப்பெண் 25-28 வயதுக்கு இடைப்பட்டவராக இருக்கலாம் எனவும், காமினி உரையாற்றிக் கொண்டிருந்த மேடைக்கு முன்பாக இரண்டாவது வரிசையில் அமர்ந்து இருந்தார் எனவும் பொலிஸ் மா அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

## வன்னிப்

மாணவர்கள் தினமும் காலையில் மலர் சாத்தி கொடி வணக்கம் செலுத்தி வருகின்றனர்.

இதே வேளை மன்னார் மாவட்டம் மடுவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களது பெற்றோரைக் கௌரவிக்கும் முகமாக அப்பகுதி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அதிபர்கள் இணைந்து பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த 22-ம் திகதி மாலை பாடசாலை மட்ட மாவீரர் வாரத்தினை சிறப்பாகக் கொண்டாடினர்.

மடு வட்டப் பொறுப்பாளர் சந்திரன், மகளிர் அமைப்பை சேர்ந்த வையந்தி ஆகியோர் மங்கள விளக்கேற்றினர். இதனைத்தொடர்ந்து அதிபர்கள் இணைந்து மாவீரர்களது பெற்றோரை அழைத்துச் சென்று மாவீரர்களுக்கு மலர் மாலை அணிவித்து தீபமேற்றுவித்தனர்.

இறுதியாக மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலை அதிபர் திரு. அந்தோனிமுத்து தலைமையில் மாவீரர் வீரவணக்கக்கூட்டம் நடைபெற்றது. இதில் பாடசாலை அதிபர்கள் மற்றும் மன்னார் மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர் சங்கீதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியாக பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## சமாதான

கம் ஆர்வம் காட்டியது. ஆனால் இப்போது அரசாங்கத்திடம் அந்த ஆர்வம் இல்லை என தமிழ் மக்கள் கருதுவதாக அவரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்க குழு இரண்டாம் கட்டப் பேச்சுக்காக யாழ்ப்பாணம் செல்வதில் சமீபத்திய சில சம்பவங்களினால் தாமதம் ஏற்பட்டுள்ளது. கூடிய விரைவில் அரசாங்கக் குழு இரண்டாம் கட்டப் பேச்சுக்காக யாழ் செல்லும்.

## வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை

## 6-ம் ஆண்டு அனுமதி-1995

விண்ணப்ப முடிவுத் திகதி:- 10-12-1994

இதவரை விண்ணப்பங்களை சேர்ப்பிக்காதவர்கள் பதிவுத் தபால் மூலமோ, நேரடியாகவோ விண்ணப்பங்களைக் கல்லூரி அலுவலகத்தில் சேர்ப்பிக்கவும்.

(9864) - அதிபர்

## கண்டெடுத்தவர்கள் தரவும்

யாழ்; எரிக்கனேஷ் கண்ணாடி நிலையத்திற்கும் கொக்குவில் அரசடி சந்திக்குமிடையில் வைத்து 628480953 V அடையாள அட்டையும், பல்கலைக்கழக அடையாள அட்டையும் மற்றும் பொருள்களும் கைப்பையுடன் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாதம்' காரியாலயத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (9863)

# எல்லைகள்மீளநிர்ணயம்; கருத்து கணிப்பு தேவை

### வடக்கு - கிழக்கு மாகாண

### - ரணில்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் எல்லைகளின் மீள நிர்ணயம் தொடர்பாக மக்களின் கருத்தையறிய அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இவ்வாறு, ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினையைப் பொறுத்தவரை, சகல தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வே காணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மன்னார்தீவு

போது. இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் தீவுப் பகுதியில் வறுமையும், உணவுப் பொருள்களுக்கு பெருமளவு தட்டுப்பாடு நிலவுவதாகவும்-அரசாங்கஅதிகாரிஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

மன்னார் தீவு, பேசாலை, எருக்கலம்பிட்டி, தாராபுரம், தாழ்வுப்பாடு பகுதி மக்களே பஞ்சத்தினால் அவதியுறுவதாகவும், கடற்படையினரின் மீன்பிடிப்புக்கான கட்டுப்பாடும், போக்குவரத்துக்குபடையினர் விதித்துள்ள கட்டுப்பாடுமே இதற்கு காரணமென அரசாங்க அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

இந்திய மீனவர்கள் எங்கள் பகுதிக்குள் மீன்பிடித்துச் செல்லும் போது நாம் கரையோரத்தில் கூட மீன்பிடிக்க முடியாதுள்ளது என மீனவர்கள் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

## வீர வணக்கம்

லைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துக் கொள்கின்றனர்.

★ ★

கடந்த 21 ஆம் திகதியன்று யாழ். மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் சாவடைந்தார்.

வீரவேங்கை நெடுமாறன் (யோசப்நிமல் - நீர்கொழும்பு தற்போதைய முகவரி மதரங்கேணி, ஆனையடி, யாழ்ப்பாணம்) என்னும் இப்போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் செல்வறட்ணம்

திருநெல்வேலி அரசடி அம்மன் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரான பொன்னம்பலம் செல்வறட்ணம் 22-11-94 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார். இவர் பாக்கியலெட்சுமி (ஜேர்மனி) யின் அன்புக் கணவரும் சதீஸ்வரன் (ஜேர்மனி), பிரதீஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற பொன்னமபலம், இராசமணி தம்பதிகளின் அருமைப் புதல்வனும் கனகரத்தினம, செல்வலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரனும் கரம்பன் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை சிவகாமிபிள்ளையின் அன்பு மருமகனும் கோபாலபிள்ளை (வவுனியா றேடர்ஸ், வவுனியா), ஞானசம்பந்தன் (பாமகோட் மதுபானசாலை யாழ்ப்பாணம், நியூ நவதாலியா ஸ்ரோர்ஸ் கிளிநொச்சி), மாணிக்கவாசகர் (ஜேர்மனி), புவனேஸ்வரி. மனோன்மணி (கனடா), மங்கையற்கரசி (ஜேர்மனி), திலகவதி (கனடா), காந்திமதி (கனடா), செல்வமதி, தர்மலிங்கம், ஜெயமணி ஆகியோரின் மைத்துனரும் தர்மராசா (கனடா), சண்முகராசா (கனடா), செல்வராசா (ஜேர்மனி), சோதி. சந்திரதேவி, சீதா (ஜேர்மனி) ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 25-11-94 இன்று ஜேர்மனியில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. ஞானசம்பந்தன் (பபா)
79, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்; [10205]

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது: